# உதயன்

சுடர் : 36 கதிர் : 232 | வெள்ளிக்கிழமை | ஆனி 32 ஆம் நாள் 16 ஜூலை 2021 | வள்ளுவர் ஆண்டு 2052 | பக்கங்கள்: 20 விலை: 30 | செய்தி : 021 493 0000 விளம்பரம்: 021 493 1111



## கொரோனாவால் யாழ்ப்பாணத்தில் இருவர் இறப்பு!

யாழ்ப்பாணம், ஜூலை 16
கொரோனாப் பெருந்தொற்றால் யாழில் மேலும் இருவர் உயிரிழந்துள்ளனர். 19 >

## மேலும் 50 பேர் சாவு மொத்தக் காவு 3,661

கொழும்பு, ஜூலை 16
இலங்கையில் மேலும் 50 பேர் கொரோனாவால் உயிரிழந்துள்ளனர் 19 >

## வடக்கில் நேற்று கொரோனா 64!

யாழ்ப்பாணம், ஜூலை 16
யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் நேற்று 641 பேரிடம் பெறப்பட்ட மாதிரிகள் பி.சி.ஆர். சோதனைக்கு உட்படுத்தப்பட்டதில் அவர்களில் 64 பேருக்குத் தொற்று உறுதிப்படுத் 19 >

# வடக்கில் டெல்டா!

## யாழ்ப்பாணம், கிளிநொச்சியில் ஒவ்வொருவர் அடையாளம்

யாழ்ப்பாணம், ஜூலை 16
இந்தியாவில் சடுதியாக அதிகளவு உயிரிழப்பை ஏற்படுத்திய கொரோனாவின் ஆபத்தான வைரஸ் திரிபான டெல்டாவுடன், யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். 19 >

## கொழும்பு நகரில் டெல்டா அபாயம்

கொழும்பு, ஜூலை 16
கொரோனா வைரஸ் தொற்றின் புதிய 'டெல்டா' வைரஸ் பரவல் அபாய வலயமாக கொழும்பு நகரம் அடையாளப்படுத்தப்பட்டுள்ளது. கொழும்பு மாநகரை அண்மித்த பகுதி 19 >

## வல்வெட்டித்துறையில் 40 தொற்றாளர்கள்!

வடமராட்சி, ஜூலை 16
வல்வெட்டித்துறையில் நேற்று மேலும் 40 பேருக்கு கொரோனாத் தொற்று உள்ளமை கண்டறியப்பட்டுள்ளது. வல்வெட்டித்துறை வடமேற்கு கிராமம் தனிமைப்படுத்தப்பட்டுள்ள நிலையில் 209 பேரிடம் முன்னெடுக்கப்பட்ட பி.சி. ஆர். பரிசோதனையில் நேற்று 40 பேருக்கு தொற்றுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள் 19 >

# தமிழர்களின் அரசியல் தீர்வுக்கு அமெரிக்க அழுத்தம் தொடரும்

## அமெரிக்கத் தூதுவர் கூட்டமைப்பிடம் உறுதி



யாழ்ப்பாணம், ஜூலை 16
தமிழ் மக்களின் நியாயமான அரசியல் தீர்வுக்காக அமெரிக்கா தொடர்ந்தும் இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுக்கும் என்று இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் அலெய்னா பி.டெப்லிட்ஸ், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிடம் உறுதியளித்துள்ளார். 19 >



## முடக்கப்பட்டது ஆதிகோவிலடி!

வடமராட்சி, ஜூலை 16
இரண்டு நாள்களில் 48 பேருக்குத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டதையடுத்து வல்வெட்டித்துறை ஆதிகோவிலடிப் பகுதி தனிமைப்படுத்தல் சட்டத்தின் கீழ் முடக்கப்பட்டுள்ளது.
பருத்தித்துறை சுகாதார மருத்துவ அதிகாரியால் யாழ்ப்பாணம் மாவட்டச் செயல 19 >

## 16 லட்சம் தடுப்பூசிகள் சீனாவால் அன்பளிப்பு

கொழும்பு, ஜூலை 16
சீனாவால் மேலும் 1.6 மில்லியன் (16 லட்சம்) தடுப்பூசிகள் இலங்கைக்கு நன்கொடையாக வழங்கப்படவுள்ளன.
இது தொடர்பில் கொழும்பில் உள்ள சீனத் தூதரகம் தெரிவிக்கையில், 19 >

## அரசினுடைய செயற்பாட்டால் தடுப்பூசியை நிறுத்தாதீர்கள்!

### பிரிட்டனை கோரியது ஐ.தே.க.

கொழும்பு, ஜூலை 16
இலங்கையிலுள்ள ஒருசில நபர்களின் நிலைப்பாடு காரணமாக, நாட்டுக்குத் தேவையான தடுப்பூசிகளை வழங்குவதை நிறுத்திவிடக்கூடாது என்று பிரிட்டனிடம் 19 >

### பருத்தித்துறையில் நேற்று எழுமாற்றுப் பரிசோதனை

## சந்தை வியாபாரிகள் ஐவருக்குத் தொற்று!

வடமராட்சி, ஜூலை 16
பருத்தித்துறை பொதுச்சந்தை மற்றும் அதனை அண்டிய பகுதியில் நேற்று சிலரிடம் அன்டிஜன் பரிசோதனைகள் முன்னெடுக்கப்பட்டதில் ஐந்து பேருக்குக் கொரோனாத் தொற்றுள் 19 >

## பருத்தித்துறையில் பல பகுதிகள் நேற்று இரவுமுதல் முடக்கம்!

வடமராட்சி, ஜூலை 16
பருத்தித்துறை நகர் உள்ளிட்ட பல பகுதிகளில் தனிமைப்படுத்தல் சட்டத்தின் கீழ் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன. அதன்படி மருந்தகங்கள் உட்பட வர்த்தக நிலையங்கள் அனைத்தும் மூடப்படவேண்டும் என்று சுகாதாரத் துறையினரால் அறிவிக்கப்பட்டுள்ளது. வங்கிகள் அத்தியாவசிய சேவைகளுக்கு மாத்திரம் திறக்க முடி 19 >

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலாம் திகதி தொடக்கம்

# தென்மராட்சிப் பகுதிகளுக்கு குடிதண்ணீர் வழங்க ஏற்பாடு

**சாவகச்சேரி, ஜுலை 16**

**தென்மராட்சி பிரதேசத்தில் வறட்சி காரணமாக குடிதண்ணீர் தட்டுப்பாடு காணப்படும் 27 கிராமங்களுக்கு ஓகஸ்ட் முதலாம் திகதி தொடக்கம் குடிதண்ணீர் வழங்கப்படவுள்ளது.**

இடர்முகாமைத்துவ அமைச்சு இதற்கு அனுமதி வழங்கியுள்ளது.

பிரதேசத்தில் வறட்சி காரணமாக குடிதண்ணீருக்குப் பற்றாக்குறை காணப்படும் கிராமங்கள் மற்றும் பாடசாலைகளுக்கு 2012 ஆம் ஆண்டு தொடக்கம் அமைச்சால் தண்ணீர்த்தொட்டிகள் வைக்கப்பட்டு பௌசர்கள் மூலமும் குழாய் வழி மூலமும் சாவகச்சேரி பிரதேச சபை, சாவகச்சேரி நகரசபை மற்றும் நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபை ஆகியவற்றின் ஊடாக குடி தண்ணீர் வழங்கப்பட்டு வருகின்றது.

இந்தவருடம் கொரோனா அச்சம் காரணமாக அரசால் அறிவிக்கப்பட்ட பயணத்தடையால் இந்த வருடத்துக்கான குடிதண்ணீர் விநியோகம் இதுவரை ஆரம்பிக்கப்படவில்லை. அண்மைக்காலமாக ஏற்பட்டுள்ள வறட்சி காரணமாக பல கிணறுகளில் தண்ணீர்மட்டம் குறைந்துள்ளதால் குடிதண்ணீர் வழங்குமாறு பிரதேச மக்கள் பிரதேச செயலகத்தில் கோரிக்கை விடுத்துவந்தனர். இந்தநிலையில், ஓகஸ்ட் முதலாம் திகதி தொடக்கம் வறட்சி காணப்படும் பகுதிகளுக்கு குடிதண்ணீர் வழங்க அமைச்சு அனுமதி வழங்கியுள்ளது.

வறட்சி பிரதேசங்களுக்கு குடிதண்ணீர் வழங்க இடர்கால முகாமைத்துவ அமைச்சு, கடந்த வருடங்களில் தண்ணீர் தாங்கிகள் மற்றும் பௌசர் வாகனங்களை உள்ளூராட்சி சபைகளுக்கு வழங்கியிருந்தது.

(த-9)



# ஆசிரிய விடுதி அமைக்க அனலைதீவில் அடிக்கல்

அனலைதீவு, ஜுலை 16

அனலைதீவு சதாசிவ மகா வித்தியாலயத்தில் கடமையாற்றும் வெளிப் பிரதேச ஆசிரியர்கள் தங்குவதற்கென, விடுதி அமைக்கப்படவுள்ளது. அதற்கான அடிக்கல் நடுகை அண்மையில் நடைபெற்றது.

அதிபர் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் தீவக கோட்டக், கல்விப் பணிப்பாளர் மு.சத்தியசீலன் விருந்தி னராகக் கலந்துகொண்டு அடிக்கல் நட்டார்.

குறித்த பாடசாலையின் ஆசிரியர்கள் நீண்டகாலமாக எதிர்நோக்கிய வதிவிட பிரச்சினைக்கு தீர்வாக குறித்த விடுதி அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

வித்தியாலயத்தில் கற்பிக்கும் வெளியிடங்களைச் சேர்ந்த ஆசிரியர்கள், பாடசாலையில் வதிவிட வசதி இல்லாததால் தனியார் வீடுகளில் வாடகைக்கு தங்கியிருந்து வாரவிடுமுறைகளில் தமது வீடுகளுக்கு சென்றுவரும் நிலையே நீடிக்கின்றது.

இந்தநிலையில், வித்தியாலய அதிபர் தா.இராதாகிருஷ்ணன் மேற்கொண்ட முயற்சியால், கனடாவில் வதியும் சிவசோதி குடும்பத்தினர் தமது காணியை ஆசிரியர் விடுதி அமைக்க வித்தியாலயத்துக்கு நன்கொடையாக வழங்கியிருந்தனர் என்று தெரிவிக்கப்பட்டது.

(த-9)

# கேப்பாபிலவு பகுதியில் பாதுகாப்பு இறுக்கம்

முல்லைத்தீவு, ஜுலை 16

முல்லைத்தீவில் மாவட்டத்தில் கேப்பாபிலவு மற்றும் அதனை அண்டிய பகுதிகளில் பொலிஸார் மற்றும் விமானப் படையினர், இராணுவத்தினர் ஆகியோர் இணைந்து பாதுகாப்பை பலப்படுத்தியுள்ளனர்.


இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச்செயலாளர் ஜோசப் ஸ்டாலின் உள்ளிட்டவர்கள் கைதுசெய்யப்பட்டு பிணையில் விடுதலை செய்யப்பட்ட பின்னர் கேப்பாபிலவில் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். அவர்கள் மீதான முறையற்ற தனிமைப்படுத்தல் செயற்பாடுகளை கண்டித்து முல்லைத்தீவு நகரம் மற்றும் கேப்பாபிலவு விமானப்படை தளத்துக்கு முன்னால் நேற்று ஆர்ப்பாட்டங்கள் நடைபெறப் போவதாக பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலையடுத்து மேற்குறித்த பகுதிகளில் படைத்தரப்பினர் குவிக்கப்பட்டு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

இதேவேளை, குறித்த விமானப்படைத்தள தனிமைப்படுத்தல் நிலையத்தில் வைக்கப்பட்டுள்ள, இலங்கை ஆசிரிய சங்க பொதுச்செயலாளர் ஜோசப் ஸ்டாலின் உள்ளிட்டவர்களைப் பார்வையிட சங்கத் தலைவர் ரியந்த பர்னாந்து தலைமையிலான, இலங்கை ஆசிரியர் குழுவினர் நேற்றுச் சென்றிருந்தனர்.

அவர்களை வவுனியா ஓமந்தை, புளியங்குளம் மற்றும் நெடுங்கேணி ஆகிய பகுதிகளில் வீதித்தடைகளை ஏற்படுத்தி இராணுவத்தினர் விசாரித்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

முல்லைத்தீவு தண்டுவான் பகுதியில் அமைந்துள்ள இராணுவ வீதித்தடையில் இராணுவத்தினர் அவர்களை நீண்டநேரம் விசாரித்துள்ளனர். இரு வாகனங்களை இராணுவத்தினர் தடுத்துவிட்டு ஏனையோரை மாத்திரமே விடுவித்துள்ளனர். அவர்கள், தமது சங்க பிரதிநிதிகளுக்கு ஒருதொகுதி உலர் உணவுப்பொருள்களை விமானப்படையினரிடம் கையளித்துள்ளனர்.

(த-246)





# சித்த வைத்தியசாலையில் பெண்கள் விடுதி திறப்பு

கிளிநொச்சி சித்த ஆதார வைத்தியசாலையில் அமைக்கப்பட்ட பெண்கள் விடுதியை வடக்கு மாகாண ஆளுநர் திருமதி பி.எஸ்.எம்.சார்ள்ஸ் நேற்றுத் திறந்து வைத்தார்.

மாகாண குறித்தொதுக்கப்பட்ட நிதி ஒதுக்கீட்டின்கீழ் இது அமைக்கப்பட்டது.

நிகழ்வில் வடக்கு மாகாண சுகாதார, சுதேச மருத்துவ, நன்னடத்தை சிறுவர் பராமரிப்பு சேவைகள் அமைச்சின் செயலாளர், கிளிநொச்சி மாவட்டச் செயலர், சித்த வைத்திய மாகாண ஆணையாளர், சித்த வைத்திய பிரதி ஆணையாளர், சித்த வைத்தியத்துறை அதிகாரிகள் மற்றும் சித்தவைத்தியத்துறை சார்ந்த அலுவலர்கள் கலந்துகொண்டிருந்தனர்.

(த-214)



# வணிக முகாமைத்துபீட கட்டடத் தொகுதி திறப்பு

யாழ்ப்பாணம், ஜுலை 16

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வணிக முகாமைத்துவ பீடத்தின் 'ஏ புளொக்' கட்டடத்தொகுதி சம்பிரதாயபூர்வமாக நேற்றுமுன்தினம் திறந்துவைக்கப்பட்டது. பல்கலைக்கழக வணிக முகாமைத்துவ பீடாதிபதி பேராசிரியர் பா. நிமலதாசன் தலைமையில் நிகழ்வு நடைபெற்றது.

இதில் துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு கட்டடத்தொகுதி, கணக்கியல் துறைப் பிரிவு, நிதி முகாமைத்துவத் துறைப்பிரிவு ஆகியவற்றை திறந்து வைத்தார்.

(த)

# ரூ.10 மில்லியனில் களஞ்சியசாலை

## ஒலுமடுவில்அடிக்கல் நடுகை

வவுனியா, ஜுலை 16

வவுனியா வடக்கு நெடுங்கேணி ஒலுமடு கிராம அலுவலர் பிரிவில், வடக்கு மாகாண விவசாயத் திணைக்களத்தின் ஏற்பாட்டில் 10 மில்லியன் ரூபா செலவில் களஞ்சியசாலை நிறுவப்படவுள்ளது. அதற்கான அடிக்கல்லை வடக்கு மாகாண ஆளுநர்திருமதி சாள்ஸ் நேற்று நட்டார்.

விவசாயிகளின் நலன்கருதி உற்பத்தி செய்யப்படும் பொருள்களை களஞ்சியப்படுத்தும் நோக்கில் இது அமைக்கப்படவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.



நிகழ்வில் வடக்கு மாகாண விவசாயப் பணிப்பாளர், வடக்கு மாகாண நீர்ப்பாசனப் பணிப்பாளர், வவுனியா மாவட்டச்செயலர் ஆகியோரும் கலந்துகொண்டிருந்தனர்.

தவிர, செயற்கை உரம் தயாரிப்பது தொடர்பான கருத்தரங்கும் அங்கு நடைபெற்றது.

இராசாயன உரங்களற்ற, நச்சில்லாத உணவுகளை உற்பத்தி செய்யும்பொருட்டு கூட்டெரு தயாரிக்கும் நடவடிக்கை அனைத்து இடங்களிலும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

(த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்வியும் இராணுவ மயமாகிறதா? குற்றச்சாட்டை நிராகரித்தது அரசு

கொழும்பு, ஜூலை 16

இலவசக்கல்வியை தனியார் மற்றும் இராணுவ மயப் படுத்துவதற்கு அரசு முயற்சிப்பதாக முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுகளை ஆளுங்கூட்டணியின் தலைமைக் கட்சி யான ஶ்ரீலங்கா பொதுஜன பெரமுன முற்றாக நிராகரித்துள்ளது.



அத்துடன், நாட்டிலுள்ள பல்கலைக் கழக கட்டமைப்பு விரிவுபடுத்தப்படும் எனவும் அந்தக்கட்சி தெரிவித்தது.

ஶ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஊடகவியலாளர் மாநாடு அந்தக்கட்சியின் தலைமை அலுவலகத்தில் நேற்றுமுற்பகல் நடைபெற்றது. இதில் கலந்துகொண்டு கருத்து வெளியிடுகையில் அந்தக் கட்சியின் உறுப்பினரான இராஜாங்க அமைச்சர் அருந்திக்க பெர்னாண்டோ மேலும் தெரிவித்ததாவது:

"நாட்டில் 2 லட்சத்துக்கும் மேற்பட்டோர் உயர்தரப்பரீட்சைக்கு தோற்றுகின்றனர். அவர்களில் சுமார் 25 ஆயிரம் பேருக்கு மாத்திரமே பல்கலைக்கழகம் செல்வதற்கான வாய்ப்பு கிட்டும். வசதி படைத்தவர்கள் தமது பிள்ளைகளை வெளிநாடுகளுக்கு அனுப்பி பட்டம்பெற வைப்பார்கள். ஆனால் நடுத்தர வகுப்பில் உள்ளவர்களுக்குதான் நெருக்கடி. 3 பாடங்களில் ஏ சித்திகளை பெற்றவர்கள்கூட பல்கலைக் கழகம் செல்லமுடியாத நிலை காணப்படுகின்றது. அவர்களுக்கு வெளிநாடு செல்லவும் நிதிவசதி இல்லை.

எனவே, உள்நாட்டிலுள்ள பல்கலைக்கழகங்கள் விரிவுபடுத்தப்பட வேண்டும். இதன் அர்த்தம் தனியார் பல்கலைக்கழகங்களை உருவாக்குவது அல்ல. அரச பல்கலைக்கழகங்களை விருத்தி செய்யவேண்டும் என்பதாகும். சேர்.ஜோன் கொத்தலாவ பல்கலைக்கழகம், இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின்கீழ்தான் செயற்படுகின்றது. பாடத்திட்டங்களை இராணுவம் உருவாக்குவதில்லை. முறையாகவே நடவடிக்கைகள் இடம்பெறுகின்றன. நிர்வாகத்தில் ஒரு சிலர் மட்டுமே இராணுவத்தினர் உள்ளனர். ஏனையோர் பல்கலைக்கழகங்களுடன் தொடர்புபட்டவர்கள். எனவே, கல்வி இராணுவ மயப்படுத்தப்படுகின்றது என்ற குற்றச்சாட்டு ஏற்புடையது அல்ல" - என்றார். (து-44)

## மாட்டுடன் மோதி இளைஞன் சாவு
### ஒட்டுசுட்டானில் பரிதாபம்

முல்லைத்தீவு, ஜூலை 16

முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் முதன்மை வீதியில் நேற்று அதிகாலை மோட்டார்சைக்கிள் மாட்டுடன் மோதுண்டு இடம்பெற்ற விபத்தில், இளைஞர் ஒருவர் உயிரிழந்தார். மற்றொரு பெண் படுகாயமடைந்த நிலையில் மாவட்ட மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

வவுனியாவைச் சேர்ந்த அனோஜன் (வயது - 24) என்ற இளைஞனே உயிரிழந்தார் என்று தெரிவிக்கப்பட்டது.

நேற்றுஅதிகாலை 4.30 மணிக்கு முத்தையன் கட்டுப்பகுதியில் இருந்து கண்ணிவெடி அகற்றும் நிறுவனத்தில் வேலைசெய்யும் இளம் யுவதியை கொக்குத்தொடுவாய் பகுதிக்கு உந்துருளியில் ஏற்றிச் சென்றவேளை புளியங்குளம் பகுதியில் எருமை மாட்டுடன் மோதி விபத்து ஏற்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது.

படுகாயமடைந்த பெண் முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். ஒட்டுசுட்டான் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றார்கள். உயிரிழந்த இளைஞனின் சடலம் உடற்கூற்றுப் பரிசோதனையின் பின்னர் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (து-19)

## வீதி விபத்தில் இளைஞன் சாவு

யாழ்ப்பாணம், ஜூலை 16

குருநாகலில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி பயணித்த முச்சக்கர வண்டி, வவுனியாவில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த பாரவூர்தியுடன் மோதியதில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

முச்சக்கரவண்டியில் பயணித்த ஏனைய மூவரும் படுகாயமடைந்த நிலையில் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இந்த விபத்து நேற்று வியாழக்கிழமை அதிகாலை இடம்பெற்றுள்ளது.

குருநாகல் பகுதியைச் சேர்ந்த நிலாந்த கோசல (வயது20) என்ற இளைஞனே விபத்தில் உயிரிழந்துள்ளார்.

சம்பவம் தொடர்பான விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ-113)

## தேர்தல் மறுசீரமைப்பு தொடர்பில் 10 அரசியல் கட்சிகள் முன்மொழிவு

கொழும்பு, ஜூலை 16

தேர்தல் சட்டங்கள் மற்றும் தேர்தல் முறைமையில் மறுசீரமைப்புகளை மேற்கொள்வது தொடர்பில் நிய மிக்கப்பட்டுள்ள நாடாளுமன்ற விசேட குழுவுக்கு, ஏற்றுக்கொள்ளப்பட்ட 10 அரசியல் கட்சிகளிடமிருந்து முன்மொழிவுகள் கிடைக்கப்பெற்றுள்ளன என்று குழுவின் தலைவரும் சபை முதல்வரும் அமைச்சருமான தினேஷ் குணவர்த்தன தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற அந்தக் குழுவின் கூட்டத்தின்போது அவர் இதனைத் தெரிவித்தார் என்று நாடாளுமன்ற பணிப்பாளர் (தொடர்பாடல்) ஷான் விஜயதுங்க தெரிவித்தார்.

முன்மொழிவுகளை சமர்ப்பிப்பதற்கு ஏற்றுக்கொள்ளப்பட்ட அரசியல் கட்சிகளுக்கு வழங்கப்பட்ட காலம் ஜூலை 15 ஆம் திகதியுடன் நிறைவடைவதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

இதுவரை 138 முன்மொழிவுகள் மற்றும் கருத்துக்கள் குழுவுக்கு சமர்பிக்கப்பட்டுள்ளன என்று குழுவின் செயலாளரும் நாடாளுமன்ற பணியாட்தொகுதியின் பிரதானியும் பிரதி செயலாளர் நாயகமுமான குஷானி ரோஹனத்தீர இதன்போது தெரிவித்தார். (து)


## ரிசாத் பதியுதீன், ரியாஜுக்கு வீட்டுக்காவல் அனுமதி மறுப்பு

கொழும்பு, ஜூலை 16

முன்னாள் அமைச்சர் ரிசாத் பதியுதீன் மற்றும் அவரது சகோதரர் ரியாஜ் பதியுதீன் ஆகியோரை அவர்களது வீடுகளில் தடுத்துவைக்க நீதிமன்றில் முன்வைத்த கோரிக்கையை பாதுகாப்பு அமைச்சர் ஏற்கமாட்டார் என்று சட்ட மா அதிபர் உயர் நீதிமன்றுக்கு அறிவித்துள்ளார்.

எந்தவொரு காரணமும் இல்லாமல் குற்ற விசாரணைப் பிரிவினரால் கைதுசெய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருப்பது சட்டவிரோதமானது என்று அறிவிக்கக்கோரி ரிசாத் பதியுதீன் மற்றும் அவரது சகோதரர் ரியாஜ் பதியுதீன் ஆகியோர் தாக்கல் செய்த அடிப்படை உரிமை மனுக்கள், நீதியரசர்கள் விஜித் மலல்கோடா, முர்து பெர்னாண்டோ மற்றும் காமினி அமரசேகர ஆகியோர் அடங்கிய நேற்றைய அமர்வு முன் பரிசீலனைக்கு வந்தன.

சட்ட மா அதிபர் சார்பில் முன்னிலையான பிரதி சொலிசிட்டர் ஜெனரல் மாதவ தென்னகோன் இந்த அறிவிப்பை வெளியிட்டார். மேலும் மனுக்கள் தொடர்பான பரிசீலனை 28ஆம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டது. (து-இ)



ஆப்கானிஸ்தானின் கந்தகர் மாகாணத்தில் தலிபான்களுக்கும் இராணுவத்தினருக்கும் இடையில் உச்சக்கட்ட மோதல் இடம்பெற்று வருகின்றது. அது தொடர்பான ஒளிப்படங்களை சர்வதேச ஊடகமான ரொயிட்டர்ஸ் வெளியிட்டுள்ளது. (ம)

## மூன்றாம் அலையின் ஆரம்பத்தில் உலகம்
### உலக சுகாதார அமைப்பு எச்சரிக்கை

வொஷிங்டன், ஜூலை 16

மூன்றாவது அலையின் ஆரம்பத்தில் உலக நாடுகள் உள்ளன என்று உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது.

இதுகுறித்து உலக சுகாதார அமைப்பின் தலைவர் டெட்ரோஸ் அதானம் கேப்ரியேசஸ் தெரிவிக்கையில், 'துரதிர்ஷ்டவசமாக நாம் மூன்றாம் அலையின் தொடக்கத்தில் இருக்கிறோம். டெல்டா வைரஸ் பரவல் காரணமாக உலக அளவில் கொரோனா தொற்றும் உயிரிழப்பும் அதிகரித்துள்ளது. டெல்டா வைரஸ் தற்போது உலகில் 111 நாடுகளில் கண்டறியப்பட்டுள்ளது. கடந்த நான்கு வாரங்களாக கொரோனா தொற்று அதிகரித்து வருகிறது' என்று தெரிவித்துள்ளார்.

முன்னதாக, கொரோனா தொற்றைத் தடுக்க இரு வெவ்வேறு நிறுவனங்களின் ஊசிகளைப் போட்டுக்கொள்ளலாம் என்று பரிந்துரை செய்வது ஆபத்தை ஏற்படுத்தக் கூடும் என உலக சுகாதார அமைப்பு எச்சரித்தது.

உலக அளவில் இந்தியா உட்பட பல நாடுகளில் ககொரோனா இரண்டாம் அலையின் வேகம் சற்று தணிந்துள்ள போதிலும் முற்றாக நீங்கவில்லை. அதேசமயம் ஒருசில நாடுகளில் அதன் தாக்கம் தீவிரமாகவே இருந்து வருகிறது. (ம)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மின்சாரம் தாக்கி சிறுவன் உயிரிழப்பு

மட்டக்களப்பு,ஜூலை 16

மின்சாரம் தாக்கி 6 வயதுச் சிறுவன் ஒருவன் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளான்.

இந்தச் சம்பவம் மட்டக்களப்பு சின்னஊறணி 3 ஆம் குறுக்கு வீதியில் நடந்துள்ளது.

தரம் 2 இல் கல்வி கற்கும் 6 வயதுடைய விநாயகம் விதுஷன் என்ற சிறுவனே இவ்வாறு உயிரிழந்துள்ளான்.


வீட்டு நிர்மாணப் பணிகளின்போது தவறுதலாக மின்சார வயர் ஒன்றை சிறுவன் பிடித்ததையடுத்து, மின்சாரம் தாக்கியுள்ளது.

உறவினர்கள் சிறுவனை மட்டக்களப்பு போதனா மருத்துவமனைக்குக் கொண்டு செல்லும்போது சிறுவன் உயிரிழந்துள்ளான்.

மட்டக்களப்பு நீதவானின் உத்தரவையடுத்து சிறுவனின் சடலம் பிரதேச பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு, உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (ஓ.4)

# கொலைசெய்யப்பட்ட காவலாளிக்கு கொரோனா

கொழும்பு,ஜூலை 16



கழுத்தறுத்து கொலைசெய்யப்பட்ட தனியார் தோட்டத்தின் காவலாளி ஒருவருக்கு கொரோனாத் தொற்று உறுதிசெய்யப்பட்டுள் ளது.

புத்தளம் ஆரம்ப மருத்துவமனையில் முன்னெடுக்கப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையின்போதே, கொலையுண்டவருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

குறித்த காவலாளி தங்கியிருந்த தற்காலிக காவல் குடிசையிலிருந்து நேற்றுமுன்தினம் சடலமாக மீட்கப்பட்டார்.

தனிப்பட்ட தகராறே கொலைக்குக் காரணமாக இருக்கலாம் என்று தெரிவிக்கப்படுகின்றது.

எனினும் கொலையுடன் தொடர்புடைய சந்தேகநபர் பிரதேசத்திலிருந்து தப்பிச்சென்றுள்ளார்.

மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஓ.4)


# கல்விசாரா ஊழியர்கள் போராட்டத்துக்கு தயார்

கொழும்பு,ஜூலை 16

கல்விசாரா ஊழியர்கள் சங்கம் எதிர்வரும் 19 ஆம் திகதி திங்கட்கிழமை வேலைநிறுத்தப் போராட்டத்தில் குதிக்கவுள்ளது.

மூடப்பட்டுள்ள பாடசாலைகளை மீண்டும் ஆரம்பிக்கும் நோக்கில் ஆசிரியர்களுக்கு மாத்திரம் கொரோனாத் தடுப்பூசி செலுத்தப்பட்டு வருகின்றது.

நாமும் பாடசாலைகளிலேயே பணியாற்றுவதால் எங்களுக்கும் தடுப்பூசி அவசியம் என்று வலியுறுத்தி இந்தப் போராட்டத்தை மேற்கொள்ளவுள்ளோம் என்று சங்கம் அறிவித்துள்ளது. (ஓ.4)



# தனங்களப்பு பிரிவில் கொரோனா சமூகத்தொற்று ஏற்படும் அபாயம்

## சுகாதாரப் பகுதியினர் எச்சரிக்கை

சாவகச்சேரி,ஜூலை 16



**தென்மராட்சி தெற்கு தனங்களப்பு பிரிவில் கொரோனா சமூகத்தொற்று ஏற்படும் அபாயம் உள்ளது என்று சாவகச்சேரி சுகாதாரப் பகுதியினர் எச்சரிக்கை விடுத்துள்ளனர் என்று அப்பகுதி மக்கள் தெரிவித்தனர்.**

இப் பகுதியில் பலருக்கு காய்ச்சல் தலையிடி மற்றும் உடல் உளைவு போன்றவை காணப்படுகின்றன எனவும் சுகாதாரப் பகுதியினருக்கு முறைப் பாடுகள் கிடைக்கப்பெற்றன.

இதனையடுத்து அவ்வாறான அறிகுறிகள் காணப்பட்ட இளைஞர் ஒருவருக்கு கடந்த 8 ஆம் திகதி எழுமாறாக பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது.

குறித்த நபருக்கு தொற்று உறுதிப்படுத்தியதையடுத்து கடந்த 13 ஆம் திகதி இவ்வாறான அறிகுறிகள் காணப்பட்ட மேலும் ஆறு பேருக்கு பி.சி.ஆர்.பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. ஆய்வு முடிவுகளின் பிரகாரம் நான்கு குடும்பங்களைச் சேர்ந்த ஆறு பேருக்கும் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

அப்பகுதியில் மேலும் பலருக்கு தொற்றுக்கான அறிகுறிகள் காணப்படுகின்றன எனவும் முறையிடப்பட்டு வருவதால் இன்று வெள்ளிக்கிழமை அறிகுறிகள் காணப்படும் ஏனையோருக்கும் பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்படவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ-9)

## போர்க்காலத்தில்

# மூடப்பட்ட தபால் நிலையம் மீண்டும் மன்னாரில் திறப்பு

மன்னார்,ஜூலை 16

மன்னார் மாவட்டத்தில் போர்க் காலத்தில் தற்காலிகமாக மூடப்பட்ட பண்டாரவெளி உப தபால் நிலையம் பொதுமக்களின் நலன்கருதி மீண்டும் திறக்கப்பட்டுள்ளது.

மன்னார் மாவட்டத்தில் 1990 ஆம் ஆண்டு இடம்பெற்ற போர் காரணமாக முசலி பிரதேச செயலகப் பிரிவிலுள்ள பண்டாரவெளி மக்கள் வெளியேற்றப்பட்டனர்.

இதனால் அப் பகுதியில் இயங்கி வந்த உப தபால் நிலையம் மூடப்பட்டது.பின்னர் மக்கள் மீள் குடியேறியும் நீண்ட காலமாக இவ் உப தபால் நிலையம் திறக்கப்படாமலேயே இருந்தது.

இது தொடர்பில் அப்பகுதி மக்களால் நாடாளுமன்ற உறுப்பினரும் மன்னார் மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களின் ஒருங்கிணைப்புக் குழு தலைவருமான காதர் மஸ்தானின் கவனத்துக்கு கொண்டுவரப்பட்டது.இதனையடுத்து கடந்த செவ்வாய்க்கிழமை மீண்டும் குறித்த உப தபால் நிலையம் திறந்து வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் முசலி பிரதேச செயலர் ரஜீவ், மன்னார் மாவட்ட தபால் அத்தியட்சகர் ரத்நாயக்க மற்றும் தேசிய சமூக நீர் வழங்கல் மாவட்ட பணிப்பாளர் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர். (ஐ-60)

## சௌபாக்யா திட்டத்தில்

# தென்மராட்சி பிரதேசத்தில் உற்பத்திக் கிராமங்கள் தெரிவு

சாவகச்சேரி, ஜூலை 16

சௌபாக்யா திட்டத்தில் தென்மராட்சி பிரதேசத்தில் தெரிவுசெய்யப்பட்ட மூன்று உற்பத்திக் கிராமங்களின் ஆரம்ப நிகழ்வு நேற்று நடைபெற்றது.

வரணி வடக்கு பிரிவில் பனைசார் தொழில்களில் ஈடுபடுவோரின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தவும், அங்குள்ள பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவு சங்கங்களின் கொத்தணியை வலுப்படுத்தும் பொருட்டும் உற்பத்திக் கிராமம் உருவாக்கப்பட்டது.

மட்டுவில் சந்திரபுரம் கிராமத்தில் அங்குள்ள மாதர் கிராம அபிவிருத்தி சங்கத்தால் இயக்கப்படும் ஆலையை வலுப்படுத்தும் பொருட்டும் கிராம மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் பொருட்டும் உற்பத்திக் கிராமம் அமைக்கப்பட்டது.

கொடிகாமம் மத்தி பிரிவில் திறன் பயிற்சிகளை வழங்கும் நிலையமும் அமைக்கப்பட்டுள்ளது.

மேற்குறிப்பிட்ட திட்டங்களை யாழ்ப்பாண மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான அங்கஜன் இராமநாதன் கலந்து கொண்டு ஆரம்பித்து வைத்தார். (ஐ-9)



## தமிழினப் பிரச்சினைக்கு

# நிரந்தரத் தீர்வு காணாமல் பொருளாதாரத்தை உயர்த்த முடியாது

## எம்.கே. சிவாஜிலிங்கம் தெரிவிப்பு

தமிழினப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காணாமல் எந்த விற்பன்னர்களாலும் இலங்கையின் பொருளாதாரத்தை தூக்கி நிறுத்த முடியாது என்று நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கம் தெரிவித்துள்ளார்.

பஸில் ராஜபக்ச நிதியமைச்சராக பொறுப்பேற்றமை தொடர்பில் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், நிதியமைச்சராக பஸில் ராஜபக்ச பொறுப்பேற்றால் என்ன எவர் பொறுப்பேற்றால் என்ன, இலங்கையினுடைய பொருளாதாரம் பாதாளத்தை நோக்கி பயணிக்கிறது.

இதை தூக்கி நிறுத்துவது என்பது இலகுவான விடயமல்ல. இதைவிட ஐரோப்பிய யூனியன் ஜி.எஸ்.பி. பிளஸ் சலுகை போன்றவற்றை இல்லாமல் செய்ய எடுக்கின்ற நடவடிக்கைகளுக்கு மத்தியிலே, சீன சார்புடன் இவர்களால் பொருளாதாரத்தை முழுமையாக கட்டியெழுப்ப முடியாது.

அல்லது இவர்கள் முழுமையாக இலங்கையை சீனாவிடம் ஒப்படைத்துவிட்டு பொருளாதாரத்தை முன்னேற்றலாம். அதனால் இலங்கை சர்வதேச அரங்கில் இருந்து அந்நியப்பட்டு பாரதூரமான விளைவுகளை எதிர்நோக்கவேண்டி வரும். அத்துடன் மேற்குலகின் பொருளாதாரத் தடைகளையும் இலங்கை சந்திக்க வேண்டி ஏற்படலாம்.

ஆகவே இலங்கையில் இனப் பிரச்சி னைக்கு உறுதியான - தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்ளக்கூடிய தீர்வை வழங்காத வரையில் பொருளாதாரத்தை எந்த விற்பன்னர்களாலும் தூக்கி நிறுத்த முடியாது என்பது எதார்த்தமான உண்மை - என்றார். (ஐ-213)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்களை விடுவிக்கத் தவறினால் பெரிய விளைவை அரசு சந்திக்கும்

## இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலர் எச்சரிக்கை

முல்லைத்தீவு,ஜூலை 16

**தனிமைப்படுத்தப்பட்டுள்ள எங்களை விடுவிக்காவிடின், இதனிலும் விட பெரியளவான விளைவை அரசு சந்திக்க நேரிடும் என்று இலங்கை ஆசிரியர் சங்கத்தின் செயலர் ஜோசர் ஸ்டாலின் எச்சரிக்கை விடுத்துள்ளார்.**



கொழும்பில் அண்மையில் ஆர்ப்பாட்டம் நடத்திய குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்ட இலங்கை ஆசிரியர் சங்கத்தின் செயலாளர் உள்ளிட்ட செயற்பாட்டாளர்கள் பிணையில் விடுவிக்கப்பட்டு, கேப்பாபிலவு இடைத்தங்கல் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இந்த நிலையில் இலங்கை ஆசிரியர் சங்கத்தின் செயலாளர் உள்ளிட்ட செயற்பாட்டாளர்கள் தனிமைப்படுத்தல் கண்காணிப்பில் இருந்து கொண்டு தொடர்ச்சியான கவனவீர்ப்பு போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றனர்.

இது தொடர்பில் கருத்து தெரிவிக்கும்போதே இலங்கை ஆசிரியர் சங்கத்தின் செயலர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்த அரசு சுகாதார வழிமுறைகளை பாவித்து மக்களின் போராட்டங்களை நசுக்கும் வகையில் செயற்படுகிறது. இதனை அரசு உடன் நிறுத்தவேண்டும். இந்த நாட்டில் மக்கள் எங்களுக்காக போராடுகின்றார்கள்.

மக்களுடன் நாங்கள் இணைந்து இந்த நாட்டில் ஜனநாயகம், சுதந்திரத்தை வெல்வதற்காக போராடுவோம் - என்றார். (ஐ-19)

# ஆர்ப்பாட்டங்களை முன்னெடுப்போர் அரசியல்வாதிகளின் கைக்கூலிகளா?

## பியல் நிசாந்தவின் சந்தேகம்



கொழும்பு,ஜூலை 16

ஆர்ப்பாட்டங்களை முன்னெடுப்பவர்கள் அரசியல்வாதிகளின் கைக்கூலிகளாக மாறக்கூடாது என்று பெண்கள் மற்றும் சிறுவர் மேம்பாடு, பாலர் பள்ளிகள் மற்றும் ஆரம்பக்கல்வி பாடசாலைகள் உட்கட்டமைப்பு மற்றும் கல்வி சேவைகள் இராஜாங்க அமைச்சர் பியல் நிசாந்த தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டில் ஆர்ப்பாட்டங்களை நடத்துவது ஜனநாயக உரிமை. கட்சிகளுக்கும் இந்த உரிமையுள்ளது. எனினும், அவர்கள் யாருக்காக இதனை செய்கிறார்கள் என்பதே முக்கியம்.

அதிகாரத்தைக் கைப்பற்றிக்கொள்வதற்கே சிலர், இவ்வாறான நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றனர். எனவே, பிள்ளைகளின் வாழ்க்கையுடன் விளையாட வேண்டாம்.

கல்வியை முறையாக வழங்க முடியாவிடின் அது கொரோனா மரணத்துக்குச் சமனானது. ஆகையால், பிள்ளைகளை நினைத்தாவது சில தீர்மானங்களை உரிய தரப்பினர் முன்னெடுக்க வேண்டும்.

கொரோனா நெருக்கடி எனக் கூறி பாடசாலைகளைத் தொடர்ந்து மூடி வைத்து, மாணவர்களின் கல்வி மற்றும் வாழ்க்கையுடன் விளையாட முடியாது. எனவே மாணவர்கள் இழந்த கல்வியை மீண்டும் திட்டமிட்டபடி வழங்க எதிர்பார்த்துள்ளோம்- என்றார். (ஒ,4)

# இரண்டாம் மாடியில் துமிந்த போராட்டம்

கொழும்பு,ஜூலை 16

தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறினார் என்றக் குற்றச்சாட்டின் கீழ் கைதுசெய்யப்பட்டு, தனிமைப்படுத்தப்பட்டுள்ள, முன்னிலை சோசலிசக் கட்சியின் பிரசார செயலாளர் துமிந்த நாகமுவ உள்ளிட்ட சிலர் இரண்டாம் மாடியில் எதிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

கண்டி பல்லேகலயில் அமைந்துள்ள இடைத்தங்கல் நிலையத்தில்,இவர்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். அங்குள்ள கட்டடமொன்றின் இரண்டாம் மாடியிலிருந்து எதிர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

பி.சி.ஆர் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு ஒரு வாரம் கடந்துள்ளபோதிலும், இதுவரை முடிவுகள் கிடைக்கவில்லை.

காரணம் இன்றி தம்மைத் தடுத்து வைத்துள்ளனர் என்று எதிர்ப்பு தெரிவித்து பதாகையை ஏந்தியவாறு அவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

அரச பொறியியலாளர் கூட்டுத்தாபனத்தின் ஊழியர்களுக்கான தொழில் தொடர்பில் ஏற்பட்டுள்ள சிக்கலுக்கு எதிர்ப்புத் தெரிவித்து, துமிந்த நாகமுவ உள்ளிட்ட தரப்பினர் அந்தத் திணைக்களத்துக்கு முன்பாக கடந்த 7 ஆம் திகதி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இதன்போது, துமிந்த நாகமுவ உள்ளிட்ட சிலர் கைதுசெய்யப்பட்டு நீதிமன்றால் பிணையில் விடுவிக்கப்பட்டனர். பிணை வழங்கப்பட்டதன் பின்னர் இவர்கள் தனிமைப்படுத்தப்பட்டனர். (ஒ,4)



பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து

# யாழ்ப்பாணம் பஸ் நிலையத்தில் இன்று கவனவீர்ப்பு போராட்டம்

யாழ்ப்பாணம்,ஜூலை 16

பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து யாழ்ப்பாணம் பஸ் நிலையத்துக்கு முன்பாக இன்று வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு கவனவீர்ப்பு போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்படவுள்ளது.

இலங்கை ஆசிரியர் சங்கத்தினரின் கைது, கல்வியில் இராணுவமயமாக்கல் மற்றும் கல்வியை தனியார் மயப்படுத்தல் ஆகியவற்றுக்கு எதிராக இலங்கை ஆசிரியர் சங்கத்தால் இந்தப் போராட்டம் நடத்தப்படவுள்ளது.

அரசின் அடக்குமுறை மற்றும் சர்வாதிகார போக்குக்கு எதிராக நடைபெறும் போராட்டத்துக்கு வலுச்சேர்க்கும் வகையில் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் அழைப்பு விடுத்துள்ளனர். (ஐ-26)



# ரிஷாத் விவகாரம் ஜெனிவாவில் ஆய்வு

கொழும்பு, ஜூலை 16

முன்னாள் அமைச்சர் ரிஷாத் பதியுதீன் மற்றும் அவரது சகோதரர் ரியாஸ் பதியுதீன் ஆகியோர் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளமை தொடர்பில் அவர்கள் இருவரதும் உறவினர்களால் ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு மேற்கொள்ளப்பட்ட முறைப்பாடு தொடர்பில் விசாரணைகள் ஆரம்பமாகியுள்ளன.

ஈஸ்டர் தாக்குதலில் ஈடுபட்டவர்களுக்கு உதவிய குற்றச்சாட்டில் ரிஷாத் மற்றும் அவரது சகோதரர் ஆகியோர் கடந்த ஏப்ரல் மாதம் 24ஆம் திகதி கைது செய்யப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ,சி)



# மாடுகள் இறைச்சியாக்கத் தடை சட்டவரைவு விரைவில் நிறைவேற்றம்

இலங்கையில் மாடுகள் வெட்டப்பட்டு இறைச்சியாக்குவதைத் தடைசெய்யும் சட்டவரைவு அடுத்த மாதத்துக்குள் நிறைவேற்றப்படும் என்று தெரியவருகின்றது.

பிரதமர் மஹிந்த ராஜபக்சவால் கடந்த ஆண்டு செப்ரெம்பர் மாதம் இந்தச் சட்டவரைவு நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டிருந்தது. அமைச்சரவையின் ஒப்புதலுடன் இது முன்மொழியப்பட்டிருந்தது.

மாடுகளை வெட்டுவதற்கு எதிராக பல அமைப்புக்கள் குரல் எழுப்பியிருந்தன. பிக்கு ஒருவர் தலதாமாளிகைக்கு முன்பாக தீக்குளித்திருந்தார். மாடுகள் வெட்டப்பட்டு இறைச்சியாக்கப்படுவதற்குப் பதிலாக வெளிநாடுகளிலிருந்து மாட்டிறைச்சியை இறக்குமதி செய்யும் திட்டத்தையும் பிரதமர் முன்மொழிந்திருந்தார். 2019ஆம் ஆண்டு 109 மில்லியன் ரூபா பெறுமதியான ஒரு லட்சத்து 16 ஆயிரத்து 766 கிலோ மாட்டிறைச்சி இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஒ,சி)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ரணிலின் கருத்துக்கள் அடிப்படையற்றவை

## இராஜாங்க அமைச்சர் சீற்றம்



கொழும்பு,ஜூலை 16

நாட்டின் தேசிய பொருளாதார நிலைமைகள் மற்றும் அந்நியச் செலாவணி தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் ரணில் விக்ரமசிங்க குறிப்பிடும் கருத்துக்கள் அடிப்படையற்றவை என்று நிதி மூல தனச் சந்தை இராஜாங்க அமைச்சர் அஜித் நிவார்ட் கப்ரால் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கை பெற்றுள்ள அரச முறை கடன்களை மீளச் செலுத்துவதில் எவ்வித நெருக்கடி நிலைமையும் ஏற்படாது. 2019 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் ஆட்சி மாற்றம் ஏற்பட்டதிலிருந்து. அரச முறை கடன்களை உரிய காலத்தில் திருப்பிச் செலுத்தியுள்ளோம். எதிர்காலத்தில் செலுத்த வேண்டிய கடன்களை முறையாக செலுத்துவதற்கு உரிய திட்டங்கள் அனைத்து துறைகளையும் அடிப்படையாகக்கொண்டு வகுக்கப்பட்டுள்ளன.

சுற்றுலாப் பயணிகளின் வருகை,வெளிநாட்டு நாணய உட்பாய்ச்சல் மற்றும் ஏற்றுமதி நிலைமைகள் ஆகிய காரணிகள் அந்நியச் செலாவணி துறையில் பிரதான பங்கு வகிக்கின்றன - என்றார். (ஒ.4)

# தேர்தல் மாவட்டங்களை அதிகரிக்க வேண்டும்

## நாடாளுமன்றக் குழுவில் 'பவ்ரல்' அமைப்பு வலியுறுத்து



**கொழும்பு, ஜூலை 16**

**பூகோள விடயங்கள், சனத்தொகை மற்றும் ஏனையவற்றைக் கருத்தில் கொண்டு தற்பொழுது காணப்படும் தேர்தல் மாவட்டங்களை 40 ஆக அதிகரிக்க வேண்டும் என்று பவ்ரல் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹன ஹெட்டியாராச்சி தெரிவித்தார்.**

தேர்தல் சட்டங்கள் மற்றும் தேர்தல் முறைமையில் மறுசீரமைப்புகளை மேற்கொள்வதற்காக நியமிக்கப்பட்டுள்ள நாடாளுமன்ற விசேட குழுவின் அமர்வு நேற்றுமுன்தினம் நடைபெற்றது. இந்த அமர்வுக்கு பவ்ரல் அமைப்பு அழைக்கப்பட்டிருந்தது. இதன்போது அந்த அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் மேற்கண்டவாறு கூறினார்.

தொகுதிவாரி மற்றும் விகிதாசார பிரதிநிதித்துவ முறை அடங்கிய கலப்பு முறைமையிலான தேர்தல் முறைமை இலங்கைக்கு பொருத்தமானது என்று பவ்ரல் அமைப்பு தெரிவித்தது.


முற்படுத்தப்பட்ட வாக்களிப்பு முறையின் தேவையை தெளிவுபடுத்திய பவ்ரல் அமைப்பு அனைத்து வாக்காளர்களுக்கும் வாக்குரிமையை வழங்குவது அத்தியாவசியமானது என குழுவில் தெரிவித்தது.

வேட்பாளர்களின் செலவீனங்களை வரையறுத்தல், ஜனாதிபதி தேர்தல் மற்றும் பொதுத்தேர்தலை ஒரே தினத்தில் நடத்துதல், தேர்தல் நாட்காட்டியொன்றை செயற்படுத்துதல், தேர்தல் முறைமையில் மற்றும் தற்பொழுது காணப்படும் தேர்தல் சட்டத்தில் காணப்படும் குறைகளை கண்டறிந்து அவற்றை புதுப்பித்தல், அரச அதிகாரம் மற்றும் அரச சொத்துக்களை முறைகேடாகப் பயன்படுத்துவதைத் தடுத்தல், தண்டப்பணம் மற்றும் தேர்தல் சட்டத்தை புதுப்பித்தல், அனைத்து வாக்காளர்களும் நியாயமான வகையில் தகவல்களை பெற்றுக்கொள்ளும் உரிமையை உறுதிப்படுத்துதல், பரப்புரைகள் தொடர்பான சட்டங்கள் உள்ளிட்ட போதுமான அளவு பெண் பிரதிநிதித்துவத்தை உறுதிப்படுத்துதல் போன்ற விடயங்கள் தொடர்பில் பவ்ரல் அமைப்பு நாடாளுமன்றக் குழுவின் முன்னிலையில் கருத்துத் தெரிவித்தது.

வேட்பாளர்களின் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களை பிரகடனப்படுத்துதல், தேசியப்பட்டியல் முறையின் ஊடாக வேட்பாளர்களை தெரிவு செய்தல், தேர்தல் ஆணைக்குழுவின் சுயாதீன தன்மையை பாதுகாத்தல் மற்றும் அரசியல் கட்சிகளை பதிவுசெய்யும் முறைமை தொடர்பிலும் பவ்ரல் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் நீண்ட நேரம் குழுவில் கருத்துத் தெரிவித்தார்.

எனினும், ஜனாதிபதி தேர்தலையும் பொதுத்தேர்தலையும் ஒரே தினத்தில் நடத்துவது சாத்தியமில்லை என இங்கு கருத்துத் தெரிவித்த தேர்தல் ஆணைக்குழுவின் முன்னாள் தலைவர் மஹிந்த தேசப்பிரிய குறிப்பிட்டார்.

தேர்தல் பரப்புரைச் செலவுகளை கட்டுப்படுத்துவதற்காக துரிதமாக சட்டங்கள் உருவாக்கப்பட வேண்டும் எனவும் மஹிந்த தேசப்பிரிய குழுவில் தெரிவித்தார். (ஒ.இ)



# வீதியில் இருந்து ஷெல்கள் மீட்பு

கொடிகாமம்,ஜூலை 16

துருப்பிடித்த நிலையில் காணப்பட்ட 3 ஷெல்கள் சரசாலை - பருத்தித்துறை வீதியில் இருந்து நேற்று முன்தினம் மீட்கப்பட்டுள்ளன.

குறித்த வீதியின் அபிவிருத்தி பணிகள் இடம்பெற்று வரும் நிலையில் வீதி அகழிப்பின்போது குறித்த ஷெல்கள் கண்டுபிடிக்கப்பட்டன.

இது தொடர்பில் சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் செய்யப்பட்ட முறைப்பாட்டையடுத்து ஷெல்கள் மீட்கப்பட்டன. (ஐ-159)



வட்டுக்கோட்டை துணைவி பகுதியைச் சேர்ந்த சில குடும்பங்களுக்கு சுமார் 2 ஆயிரம் ரூபா பெறுமதியான உணவுப் பொருள்கள் வழங்கப்பட்டன.டென்மார்க் நாட்டைச் சேர்ந்த ஒருவரின் 36 ஆவது நினைவுதினத்தை முன்னிட்டு யாழ். பூமணி அம்மா அறக்கட்டளை ஊடாக இந்த உதவிகள் அண்மையில் வழங்கப்பட்டன. (ஐ)

# மெசிடோ நிறுவனத்தால் பொருள்கள் கையளிப்பு

மன்னார்,ஜூலை 16

மன்னார் பிரதேச செயலக பிரிவில் தடுப்பூசி செலுத்தும் நடவடிக்கைகளில் ஈடுபடும் சுகாதார தொண்டர்கள் மற்றும் பொதுமக்களுக்கான ஒரு தொகுதி உதவிப் பொருள்கள் வழங்கப்பட்டன.

மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தின் ஏற்பாட்டில் பணிப்பாளர் யாட்சன் பிகிராடோவால் இப் பொருள்கள் மன்னார் பிரதேச செயலரிடம் நேற்றுக் கையளிக்கப்பட்டன.

மன்னார் மாவட்டத்தில் கடந்த ஒரு வாரமாக தடுப்பூசி வழங்கும் செயற்றிட்டம் இடம்பெற்று வருகின்றது.

இந்தச் செயற்பாட்டில் ஈடுபட்டுவரும் தொண்டர்கள் மற்றும் ஊசி செலுத்திக்கொள்ளும் பொதுமக்களுக்கு பயன்படுத்துவதற்கு என ஒரு லட்சம் ரூபா பெறுமதியான பொருள்கள் வழங்கப்பட்டன.

நிகழ்வில் மெசிடா நிறுவன ஊழியர்கள் மற்றும் பிரதேச செயலக திட்டமிடல் பணிப்பாளர் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ஐ-213)



# தனிமைப்படுத்தல் சட்டம் அனைவருக்கும் பொதுவானது

## மீறினால் சட்ட நடவடிக்கை

கொழும்பு,ஜூலை 16

தனிமைப்படுத்தல் சட்டங்களை மீறுபவர்களைக் கைதுசெய்யுமாறு பொலிஸாருக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. இதற்கு நாட்டு மக்கள் அனைவரும் கட்டுப்பட வேண்டும். இதில் எவரும் விதிவிலக்கல்ல என்று சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

பூகோள மட்டத்தில் தாக்கம் செலுத்தியுள்ள கொவிட் - 19 வைரஸ் தாக்கத்தை முழுமையாக இல்லா தொழிக்கும் மருந்து இதுவரையில் உலகில் கண்டு பிடிக்கப்படவில்லை.

வைரஸ் தொற்றாமல் இருப்பதற்காக மாத்திரமே தடுப்பூசி கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. தடுப்பூசிகள் எந்தளவுக்கு சாத்தியமானவையாக அமையும் என் பது இதுவரையில் விஞ்ஞானபூர்வமாக நிரூபிக்கப்படவில்லை - என்றார். (ஒ.4)



Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## பனை இருக்க பயமேன்!

உக்காத 'பொலித்தீன்' மற்றும் 'லஞ்சீற்' உற்பத்திக்கு ஓகஸ்ட் மாதம் முதலாம் திகதி முதல் தடை விதிக்கப்பட்டுள்ளது என்று அறிவித்துள்ளார் சுற்றாடல்துறை அமைச்சர் மஹிந்த அமரவீர. இலங்கையில் நாளாந்தப் பொலித்தீன் பாவனை 12 மில்லியனில் இருந்து 15 மில்லியனாக அதிகரித்துள்ளது என்றும் அவர் குறிப்பிட்டுள் ளார்.

பொலித்தீன் 'லஞ்ச் சீற்' பாவனை என்பது சமீபத்திய தசாப்தங்களில் புகுந்து கொண்ட ஒன்றே. அதற்கு முன்னர் இதேபனை, வாழை போன்ற மரங்களின் ஓலை, இலை என்பனவே எங்கள் வாழ்வியலை நிரப்பியிருந்தன. ஆரோக்கிய வாழ்வுக்கும் வழிவகுத்திருந்தன. மீண்டும் பொலித்தீன் அற்ற யுகத்துக்குள் திரும்ப, அரசின் இப்போதைய அறிவிப்பு முதற்படியாக அமையட்டும்.

விமர்சனங்களுக்கு அப்பால் இதுவொரு நல்ல திட்டம். வடமாகாணக் கடற்பரப்புக்களில் பிராந்திய மீனவர்களுக்குத் தடையிருக்க, எங்கிருந்தோ வரும் மீனவர்கள் கடலட்டை பிடித்துவிட்டுச் செல்வதைப்போல் பொலித்தீனுக்கான இந்தத் தடையும் குறிப்பிட்ட ஒரு சாராருக்காக அல்லாமல் நாடளாவிய ரீதியில் பக்கச்சார்பில்லாமல் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்பதுதான் மக்களின் வேணவா.


நாளொன்றுக்கு 15 மில்லியன் பொலித்தீன் இலங்கை மக்களால் பயன்படுத்தப்படுகின்றது. அவை முறையற்ற விதத்தில் அகற்றப்படுகின்றன என்றால், இந்த ஆபத்தின் தீவிரத் தன்மையை மக்களாகிய நாம் உணர்ந்துகொள்ள வேண்டிய அதேநேரம், இதிலிருக்கக்கூடிய மிகப்பெரும் வணிகத்தை அரசு முதலில் புரிந்துகொள்ள வேண்டும்.

நாளொன்றுக்கு சராசரியாகப் பயன்படுத்தப்படும் 15 மில்லியன் பொலித்தீனுக்கான பிரதியீடாக இலங்கையிலேயே ஏகப்பட்ட வளங்கள் கிடக்கின்றன. வாழை, கமுகு, தென்னை, பனை ஆகியவற்றை மையப்படுத்தி இந்தப் பொலித்தீன் பாவனையை ஓரம்கட்டும் நடவடிக்கைகள் அமையப்பெற்றால் அது இலங்கைக்கும் வடக்கு – கிழக்குக்கும் பெரும் வரப்பிரசாதமாக அமையும்.

வடக்கும் கிழக்கும் பனைகளின் பூமி. போரின்போதும் அதன் பின்னரும் பல்லாயிரம் பனைகளை நாம் இழந்துவிட்டாலும் ஒப்பீட்டளவில் இங்கு தேவையான அளவு பனைகள் உள்ளன. இங்கிருக்கக்கூடிய பல லட்சம் பனைகளில் இருந்து பெறப்படும் ஓலைகளைக் கொண்டு செய்யப்படும் பைகள், பெட்டகங்கள் இவற்றின் பயன்பாட்டை அரசு ஊக்குவித்தால் இதன் மூலம் போரால் பாதிக்கப்பட்ட தமிழர் தாயகம் ஒரு பெரும் பொருளாதார அத்திபாரத்தைப் பெறுவதுடன், தேசியப் பொருளாதாரத்தில் எவ்வாறு மலையகம் கனதியான பங்களிப்பை தேயிலையை வைத்துச் செய்கின்றதோ அதேபோல் வடக்கும் கிழக்கும் பனைகளை வைத்து தத்தம் பங்கை ஆற்றியே தீரும். அதேநேரம் பனைகளுக்கான இருப்பும் அதிகரித்து அவற்றுக்கான கேள்வியும் நிலைத்திருக்கும்.

பனைகளை மட்டுமல்ல கமுகு மற்றும் வாழைகளை வைத்தும் இவ்வாறான சீரிய திட்டங்களைத் தீட்ட முடியும். பயன்பெற்ற பல்லாயிரம் வாழைகள் அந்தந்தத் தோட்டங்களுக்கு உரமாக்கப்படுகின்ற போதிலும் மிதமிஞ்சிய வாழைகள் வீணாக வீசப்படுகின்றமை கண்கூடு. வாழை மடல்களை உரியவாறு பதப்படுத்தி, இயந்திரவியலின் உதவியுடன் பொலித்தீனை அவ்வளவு நேர்த்தியாகப் பிரதியீடு செய்ய முடியும்.

ஆக, ஒரு கல்லில் இரண்டு மாங்காய் என்பதைப் போன்று பொலித்தீனால் ஏற்படக்கூடிய பேராபத்து நிலையில் இருந்து நாட்டைக் காப்பது மட்டுமன்றி, ஒரு தேசியப் பொருளாதாரத்தை பொலித்தீனுக்கான மாற்றுப் பிரதியீடுகளால் அடைந்துவிடக்கூடிய சந்தை இலங்கையில் அதிலும் குறிப்பாக வடக்கு – கிழக்கில் இருக்கின்றது. இதை உணர்ந்து நல்லபல திட்டங்களை கொழும்பு தமிழர் தாயகத்தில் மேற்கொண்டு அதன்மூலம் வடக்கு – கிழக்கின் பொருளாதாரத்தையும், பெண் தலைமைக் குடும்பங்களின் வாழ்வாதாரத்தையும், தேசியப் பொருளாதாரத்தையும் கட்டியெழுப்ப முன்வர வேண்டும்.



# கோத்தாபய கொலை முயற்சியுடன் தொடர்புடையவரே முல்லையில் கைது



**கொழும்பு, ஜூலை 16**
**கட்டாரிலிருந்து நாடு கடத்தப்பட்டு முள்ளியவளை கொரோனா இடைத்தங்கல் நிலையத்தில் தனிமைப்படுத்தல் காலம் முடிவடைந்ததும் கைது செய்யப்பட்டவர், ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச, விநாயகமூர்த்தி முரளிதரன் (கருணா அம்மான்), நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் ஆகியோரைக் கொலை செய்ய சதி செய்தவர் என்று பயங்கரவாத தடுப்புப் பிரிவு தெரிவித்துள்ளது.**

கடந்த 13ஆம் திகதி முள்ளியவளை கொரோனா இடைத்தங்கல் நிலையத்தில் வைத்து திருகோணமலையைச் சேர்ந்த 41 வயதான ஒருவர் கைதுசெய்யப்பட்டிருந்தார். அவர் திருகோணமலையிலிருந்து 2019ஆம் ஆண்டு தப்பிச்சென்றிருந்த நிலையில் இன்டர்போல் ஊடாக தேடப்பட்டு வந்தார் எனவும், இந்த நிலையில் கட்டாரில் அவர் கைது செய்யப்பட்டார் எனவும் பயங்கரவாத தடுப்புப்பிரிவு தெரிவித்தது. நாடு கடத்தப்பட்டு இலங்கைக்கு கொண்டுவரப்பட்ட அவர் கொரோனா இடைத்தங்கல் நிலையத்தில் தனிமைப்படுத்தப்பட்டிருந்தார். இவர் ஜனாதிபதி கோத்தாபய, தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் முன்னாள் தளபதிகளுள் ஒருவரான கருணா அம்மான் என்று அழைக்கப்படும் விநாயகமூர்த்தி முரளிதரன், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் ஆகியோரைக் கொல்ல சதித்திட்டம் தீட்டினார் எனவும் பயங்கரவாத தடுப்புப் பிரிவினர் தெரிவித்துள்ளனர். (ஒ.சி)

# அரசியல் பயணத்தை கைவிட்டார் கோத்தா?

ஐ.ம.சக்தி கிண்டல்

கொழும்பு.ஜூலை 16
பதவிக்காலத்தின் இரண்டு வருடங்கள் முடிவடைவதற்கு முன்னரே ஜனாதிபதி தனது அரசியல் பயணத்தைக் கைவிட்டுள்ளார். இதனால் அடுத்த ஜனாதிபதி வேட்பாளரை அரச தரப்பு தேடுகின்றது என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார தெரிவித்துள்ளார்.

'பௌத்தத்தைப் பாதுகாப்போம்' என்று தெரிவித்து ஆட்சிக்கு வந்த அரசு, நியாயமான கரிசனைகளை வெளியிடும் பௌத்த குருமார்களை, தொழிற்சங்கவாதிகளைத் தாக்குகின்றது.

இதன் காரணமாக அரசுக்கு எதிராக மக்களை அணிதிரட்டப்போகின்றோம் - என்றார் நளின் பண்டார. (ஒ,4)

# இணையவழிக் கற்றல் 5 நாள்களாக முடக்கம்

கொழும்பு.ஜூலை 16
இணையவழிக் கல்விச் செயற்பாடுகளை இடைநிறுத்தி, நாடளாவிய ரீதியிலுள்ள ஆசிரியர்களால் முன்னெடுக்கப்பட்டு வரும் தொழிற்சங்க நடவடிக்கை நேற்று 5 ஆவது நாளாகவும் தொடர்ந்துள்ளது.

இலங்கை ஆசிரியர் சங்கத்தின் செயலாளர் ஜோசப் ஸ்டாலின், முன்னிலை சோசலிஷக் கட்சியின் உறுப்பினர் துமிந்த நாகமுவ உள்ளிட்ட தொழிற்சங்கவாதிகள் கைதுசெய்யப்பட்டு, நீதிமன்றால் விடுவிக்கப்பட்டதன் பின்னரும், வலுக்கட்டாயமாக தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

இதற்கு எதிராக நாடளாவிய ரீதியிலுள்ள அதிபர், ஆசியர்கள் தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர்.

இதனால் கடந்த திங்கட்கிழமையிலிருந்து மறு அறிவித்தல் வரை இணையவழிக் கற்றல் நடவடிக்கை நிறுத்தப்பட்டது. இந்தத் தொழிற்சங்க நடவடிக்கை 5 ஆவது நாளாகவும் தொடர்ந்துள்ளது. அதேவேளை பாடசாலை வெளிக்கள ஊழியர்கள் தமக்கு தடுப்பூசி வழங்கப்படும் வரை பாடசாலைகளுக்குச் செல்வதை இடைநிறுத்தியுள்ளனர். (ஒ,4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீண்டும்

# கொரோனாத் தொற்றுக்குள்ளாகும் தமிழ் அரசியல் கைதிகள்

யாழ்ப்பாணம், ஜூலை 16



**தமிழ் அரசியல் கைதிகள் நீண்ட காலமாக தடுத்து வைக்கப் பட்டிருப்பதால் அவர்கள் ஏற்கனவே நோய்த் தொற்றுக் குள்ளாகியுள்ள நிலையில், கொரோனாத் தொற்றாலும் கடுமை யாகப் பாதிக்கப்பட்டுள்ளனர்.**

அநுராதபுரம் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த தமிழ் அரசியல் கைதியான நடேசன் தரு மராசா கொரோனாத் தொற்றுக்குள் ளாகி வெலிக்கடைச் சிறைச்சாலை யிலும், கொழும்பு மகசின் சிறைச் சாலையில் தடுத்து வைக்கப்பட்டி ருந்த செல்லத்துரை கிருபாகரன் சிறை மருத்துவமனையிலும் சேர்க் கப்பட்டுள்ளனர்.

இது தொடர்பில் குரலற்றவர்களின் குரல் அமைப்பு வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில்,

தமிழ் அரசியல் கைதிகள் இரண்டா வது தடவையாக கொரோனாத் தொற்றுப் பாதிப்புக்குள்ளாகி வரு கின்றனர். மிக நீண்டகாலமாக சிறைத்தடுப்பில் வைக்கப்பட்டுள்ள தால் பல்வேறு வகையான நோய் களால் பீடிக்கப்பட்டுள்ளார்கள்.

கைதிகளை பார்வையிடுவதற்கான சந்தர்ப்பமும் நிறுத்தப்பட்டுள்ளதன் காரணமாக அவர்களுக்கு ஊட்டச் சத்துமிக்க உணவுகள் கிடைப்ப தற்கான வாய்ப்புக்கள் அற்று உடல் உள ரீதியில் பலவீனம் அடைந்துள் ளனர். நோயெதிர்ப்பு சக்தியை இழந்துள்ள அவர்கள் மிக இலகு வாக நோய்த் தொற்றுக்கு உள்ளா கின்றனர். இந்த நிலை தொடருமா னால் உயிராபத்துக்கள் ஏற்படக் கூடிய அபாயம் இருக்கிறது.

நாட்டுக்கு கணிசமான தடுப்பூசிகள் கிடைக்கப்பெறுகின்றன. எனவே தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிக ளுக்கு தடுப்பூசி ஏற்றுவதற்கு நடவ டிக்கை எடுப்பது அவசியம். நோய் களோடு சிறையில் வாடும் தமிழ் அரசியல் கைதிகளுக்கு முன்னு ரிமை வழங்கி அவர்களை ஆபத்தி லிருந்து மீட்க வேண்டியது அரசின் கடமை.

கொழும்பு புதிய மகசின் சிறைச் சாலையில் தடுத்து வைக்கப்பட் டுள்ள தமிழ் அரசியல் கைதிகள் நோய்வாய்ப்படுகின்ற நிலையில், அவர்களுக்கான சிகிச்சைகளை பெற்றுக்கொள்வதில் கடுமையான இடையூறுகள் ஏற்பட்டுள்ளன எனவும் தெரிய வருகிறது. மகசின் சிறைச்சாலை மருத்துவர்களால் மேலதிக சிகிச்சைக்கென பரிந்து ரைக்கப்படுகின்ற தமிழ் அரசியல் கைதிகளை கொழும்பு தேசிய மருத் துவமனைக்கு கொண்டு சென்று சிகிச்சையைப் பெற்றுக்கொடுப்ப தற்கு சிறைத்துறை நிர்வாகம் பொருத்தமற்ற காரணங்களை கூறி வெறுமனே காலத்தை கடத்தி வருகிறது எனவும் கைதிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

தமிழ் அரசியல் கைதிகள் கைது செய்யப்பட்ட காலங்களின்போது இவர்கள் சந்தித்த துன்புறுத்தல்க ளின் பிந்திய விளைவுகள் தற் போது வெளிப்படத்தொடங்கியுள்ள தாலும், போர்க்காலத்தின் போதான விழுப்புண் தாக்கங்களாலும் அரசி யல் கைதிகள் பல்வேறு நோய்க ளுக்குள்ளாகியுள்ளனர். கட்புலன் செவிப்புலன் பாதிப்பு, சுவாசக் கோளாறு, ஒருதலைக்குத்து, சிறு நீரக பாதிப்பு, இருதய நோய், குடல் அலற்சி, நீரிழிவு, முள்ளந்தண்டு பாதிப்பு, முழங்கால் மூட்டு தேய்வு, ஆஸ்மா, மன அழுத்தம், தோல் நோய்கள் என்பவற்றால் அன்றாட பொழுதுகளை துன்பங்களோடு கழித்து வருகிறார்கள்.

தமிழ் அரசியல் கைதிகளை பொறுத்த வரையில் பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழான நீண்ட கால சிறைவைப்பு, துரித விசார ணையற்ற விளக்கமறியல், கடுமை யான தண்டனை தீர்ப்புக்கள் என்று அனுபவித்து வரும் துன்பங்களுக்கு மேலதிகமாக இவ்வாறு மருத்துவ தேவைகளை நிறைவேற்றிக் கொள்ள முடியாமல் துயரப்படுவது கொடியது. மோசமான உரிமை மீறல் செயற்பாடாகவே கருத வேண்டியுள்ளது. அரசானது, தமிழ் அரசியல் கைதிகள் விடயத்தில் கரி சனை கொண்டுள்ளது எனத் தெரி வித்து வருகின்ற நிலையில், இது போன்ற அடிப்படை பிரச்சினை களுக்கு தீர்வைக் காணாமல் இருப் பது நம்பிக்கையீனத்தை ஏற்படுத் துகிறது.

சிறைத்துறையும் மருத்துவத்துறை யும் தமிழ் அரசியல் கைதிகள் விட யத்தில் மாற்றான் தாய் மனப்பாங் குடன் நடந்துகொள்வதை நிறுத்த வேண்டும். அரசியல் கைதிகளுக்கு கொழும்பு தேசிய மருத்துவமனை யில் சேர்த்து சிகிச்சை வழங்குவதில் ஏதேனும் நடைமுறை இடையூறு கள் காணப்படுமாயின், விசேட பாதுகாப்பு கட்டமைப்புக்களுடன் அமைக்கப்பட்டுள்ள யாழ்ப்பாணம் சிறைச்சாலைக்கு அவர்களை மாற்றி யாழ். போதனா மருத்துவம னையில் தேவையான சிகிச்சை களை பெற்றுக்கொள்வதற்கு அரசு நடவடிக்கை எடுக்க முடியும். தமிழ் அரசியல் கைதிகள் எதிர்நோக்கும் இவ்வாறான பிரச்சனைகள் தொடர் பில் தமிழ் நாடாளுமன்ற பிரதிநிதி கள் அரசுடன் பேசி தீர்வுகளை கண்டறிய வேண்டும் என்று, அந்த ஊடக அறிக்கையில் வலியுறுத்தப் பட்டுள்ளது.

(ஒ.இ)

# அரசின் தேவைகளுக்காக சட்டங்கள் நிறைவேற்றம்

## புத்திஜீவிகள் பேரவை சுட்டிக்காட்டு

கொழும்பு,ஜூலை 16

நாட்டில் கொரோனா வைரஸ் பரவல் பெரும் நெருக்கடிகளை ஏற்படுத்தியுள்ள நிலையில், அரசு தமது தேவைகளுக்கு ஏற்ப சட்டங்களை நாடாளுமன்றத்தில் அவசரமாக நிறைவேற்றிக் கொள்கின்றது.

இவ்வாறு மக்களுக்கான புத்திஜீவிகள் பேரவை தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் புத்திஜீவிகள் பேரவையின் பிரதி நிதிகள் தெரிவிக்கையில்,

நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கும் ஜோன் கொத்தலாவல தேசிய பாதுகாப்பு பல்க லைக்கழக சட்டவரைவால் நாட்டின் இலவசக்கல் விக் கட்டமைப்புக்கு பெரும் அச்சுறுத்தல் ஏற்ப டுத்தப்பட்டுள்ளது.

குறிப்பாக நாட்டிலுள்ள பொதுவான பல்கலைக் கழக கட்டமைப்புக்களுக்கும், பல்கலைக்கழகங் கள் தொடர்பான சட்டவரையறைகளுக்கும் முர ணான வகையில் ஜோன் கொத்தலாவல தேசிய பாதுகாப்பு பல்கலைக்கழகம் நிறுவப்படுவதற்கு இந்த சட்டவரைவு வாய்ப்பளிக்கின்றது.

அத்தோடு குறித்த பல்கலைக்கழகம் உயர்கல் வியமைச்சின் கீழிருந்து பாதுகாப்பு அமைச்சின் கீழ் கொண்டுவரப்படும்.

பல்கலைக்கழகத்தின் நிர்வாகத்துக்குப் பொறுப் பாக நியமிக்கப்படுபவர்கள் புத்திஜீவிகளும், கல் விமான்களும் அல்ல. மாறாக பாதுகாப்பு அமைச் சின் செயலாளர், பாதுகாப்பு அமைச்சின் மேலதிக செயலாளர், முப்படைகளின் தளபதிகள் மற்றும் பல்கலைக்கழத்தின் பீடாதிபதி, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் பெயர் குறிப் பிடப்படும் ஒருவர், நிதியமைச்சால் பெயர் குறிப் பிடப்படும் ஒருவர் உள்ளிட்ட தரப்பினரே இந்தப் பல்கலைக்கழகத்தின் நிர்வாக சபையில் அங்கம் வகிக்கப் போகின்றனர். ஆகவே பாதுகாப்பு அமைச்சின் கட்டளைகளே இந்த நிர்வாக சபை யின் ஊடாக நடைமுறைப்படுத்தப்படும்.

20 ஆவது திருத்தம், கொழும்புத்துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழுச்சட்டம் ஆகியவற் றின் வரிசையில் தற்போது ஜோன் கொத்தலாவல தேசிய பாதுகாப்பு பல்கலைக்கழக சட்டவரைவை யும் நிறைவேற்றி, நாட்டுமக்களின் கல்வி உரி மையைப் படுகுழியில் தள்ளுவதற்கு அரசு முயன்று கொண்டிருக்கின்றது. எனவே இந்தச் சட்டவரைவை உடனடியாக மீளப்பெறுமாறு வலி யுறுத்துகின்றோம். அதேவேளை, நாட்டினதும், பொதுமக்களினதும் ஜனநாயகத்தன்மைக்கு மதிப்பளிக்குமாறும் கேட்டுக்கொள்கின்றோம் - என்றனர்.

(ஒ.4)

# சட்டத்துக்கு அமைவாகவே போராட்டக்காரர்கள் கைது

## பொலிஸாரை குறைகூற வேண்டாம் என்கிறார் சரத்

கொழும்பு,ஜூலை 16

பொதுமக்களின் சுகாதாரப் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் பொறுப்பு அரசுக்கு உண்டு. சுகாதாரத் தரப்பினரது கோரிக் கைகளுக்கு அமையவே போராட்டகாரர்கள் கைதுசெய் யப்பட்டனர். எனவே பொலிஸார் மீது பழி சுமத்துவது பயனற் றது. தனிமைப்படுத்தல் சட்டம் தொடர்ச்சியாக செயற்படுத்தப்ப டும் என்று பொதுமக்கள் பாது காப்பு அமைச்சர் அட்மிரல் சரத் வீரசேகர தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கை யில்,

பல்வேறு காரணிகளை முன்னி லைப்படுத்தி ஒரு தரப்பினர் தற்போது போராட்டங்களை தொடர்ச்சியாக முன்னெடுத் துள்ளனர்.

பேச்சுச் சுதந்திரம் மற்றும் ஒன்றுகூடல் ஆகியவை ஜனநா யக உரிமையாகக் காணப்படு கின்றன. இதனை இவர்கள் தவறான முறையில் பயன்படுத் திக் கொள்கின்றனர்.

கொவிட்19 வைரஸ் தாக்கம் பூகோள மட்டத்தில் பெரும் தாக் கத்தை ஏற்படுத்தியுள்ளது. இதன் தாக்கத்தை நாமும் தற் போது எதிர்கொண்டுள்ளோம். நாட்டு மக்களின் சுகாதாரப் பாதுகாப்பைக் கருத்தில் கொண்டு தனிமைப்படுத்தல் சட்டம் நடைமுறையில் உள் ளது. இதன் காரணமாக ஒன்று கூடல் மற்றும் போராட்டங்க ளில் ஈடுபடுவதற்கு மறு அறி வித்தல் விடுக்கும் வரையில் தடை விதிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறான நிலையில் ஒரு தரப்பினர் கடந்த வாரம் நாடா ளுமன்ற சுற்று வட்டத்தில் தனி மைப்படுத்தல் சட்டத்துக்கு முர ணான வகையில் போராட்டத் தில் ஈடுபட்டனர்.

பொதுச் சுகாதார சேவை அதி காரிகளின் பரிந்துரைகளுக்கு அமையவே அவர்கள் தற் போது தனிமைப்படுத்தப்பட்டுள் ளனர். இதனை தவறு என எவராலும் குறிப்பிடமுடியாது.

வைரஸ் தாக்கத்தால் கடந்த காலங்களில் நாட்டு மக்கள் பல விடயங்களையும், முக்கிய பண் டிகைகளையும் கொண்டாடா மல் தியாகம் செய்தனர்.

பண்டிகைகளுக்கு தடை விதிக் கப்பட்டதால் எவரும் வீதிக் கிறங்கி போராடவில்லை. தற் போதைய போராட்டங்கள் குறு கிய நோக்கங்களை அடிப்படை யாகக் கொண்டு காணப்படு கின்றன.



ஒரு சிலரது பொறுப்பற்ற செயற்பாட்டால், ஒட்டு மொத்த மக்களையும் நெருக்கடிக்குள் ளாக்க முடியாது. தனிமைப்ப டுத்தல் சட்டம் விரிவுபடுத்தப் பட்ட வகையில் செயற்படுத்தப் படும் - என்றார்.

(ஒ.4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரே நாளில் 9 பேர் உயிரிழப்பு

கொழும்பு,ஜூலை 16

நாடு முழுவதும் பயணக்கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டுள்ளதை அடுத்து, மீண்டும் வீதி விபத்துக்கள் அதிகரித்துள்ளன. நேற்று முன்தினமும் 9 பேர் உயிரிழந்துள்ளனர். விபத்துக்களைக் கட்டுப்படுத்துவதற்காக சட்டங்கள் மற்றும் தண்டனைகளை வலுப்படுத்தினாலும், வாகனங்களின் சாரதிகள் உரியவாறு ஒழுக்கமாகச் செயற்படாத விடத்து, விபத்துக்களைக் குறைக்கமுடியாது என்று குற்றங்கள் மற்றும் வீதிப் போக்குவரத்துக்கு தொடர்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார். (ஒ.4)

# சில நாள்களுக்கு மழை தொடரும்

கொழும்பு,ஜூலை 16

நாட்டில் வடக்கு உட்பட குறிப்பிட்ட சில மாகாணங்களில், அடுத்த சில நாள்களுக்கு மாலையில் இடியுடன் கூடிய மழை பெய்வதற்கான வாய்ப்புக்கள் காணப்படுகின்றன என்று வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது. இடியுடன் கூடிய மழை பெய்யும் வேளைகளில், தற்காலிகமாக பலத்த காற்றும் வீசக்கூடும். அத்துடன் மின்னல் தாக்கங்களால் ஏற்படக்கூடிய பாதிப்புகளைக் குறைத்துக்கொள்ளத் தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ளுமாறு பொதுமக்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

கொழும்பிலிருந்து ஹம்பாந்தோட்டை ஊடாக பொத்துவில் வரையான கடற்பரப்புகள் அவ்வப்போது ஓரளவு கொந்தளிப்பாகக் காணப்படும் என்றும் திணைக்களத்தின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ.4)



# இலங்கையுடான உறவை மேம்படுத்த தீவிர கவனம்

*பாகிஸ்தான் தூதுவர் தெரிவிப்பு*

கொழும்பு,ஜூலை 16

இலங்கையுடனான வர்த்தக மற்றும் பொருளாதார ரீதியான இரு தரப்பு நல்லுறவை மேம்படுத்துவதில், தீவிர கவனம் செலுத்தியுள்ளோம் என்று இலங்கைக்கான பாகிஸ்தான் தூதுவர் மேஜர் ஜெனரல் (ஓய்வு பெற்ற) முஹம்மது சாத் கட்டாக் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

பாகிஸ்தான் பிரதமர் இம்ரான்கானின் இலங்கைக்கான விஜயத்தைத் தொடர்ந்து, இருநாடுகளுக்கும் இடையிலான வர்த்தக ஒத்துழைப்புக்கள் மேம்பட்டுள்ளன. எதிர்வரும் இருவாரத்தில் பாகிஸ்தானின் வர்த்தக மற்றும் முதலீட்டுச்சபைகளின் உயர்மட்டப் பிரதிநிதிகள் குழுவொன்று இலங்கைக்கு விஜயம் செய்வர்.

எவ்வித இன, மத வேறுபாடுகளுமின்றி இலங்கை மக்களுக்குத் தேவையான அனைத்துவித ஒத்துழைப்புக்களையும் தொடர்ந்து வழங்குவதற்குத் தயாராக இருக்கின்றோம்.

பல்துறை சார்ந்து இருநாடுகளுக்கும் இடையிலான ஒத்துழைப்பை மேலும் விரிவுபடுத்துவதே பாகிஸ்தான் அரசின் கொள்கையாகவும் காணப்படுகின்றது.

பாகிஸ்தான் இலங்கை சுதந்திர வர்த்தக ஒப்பந்தங்களின் ஊடாக இருநாடுகளுக்கும் இடையிலான வாணிபத்தொடர்புகளை மேம்படுத்துவது எமது பிரதான எதிர்பார்ப்பாக உள்ளது.

பொருளாதாரம், சமூகம், வர்த்தகம் மற்றும் ஊடகம், கல்வி, சுற்றுலா, சுகாதாரம் உள்ளிட்ட அனைத்துத்துறைகள் சார்ந்தும் இருநாடுகளுக்கும் இடையிலான நல்லுறவை விரிவாக்கம்செய்வதற்கு அவசியமான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இலங்கையிலிருந்து பாகிஸ்தானுக்கான தேயிலை ஏற்றுமதியை ஊக்குவிப்பதற்கு அவசியமான நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கும் தயாராக இருக்கின்றோம்.

அத்துடன் இலங்கையைச் சேர்ந்த பௌத்த தேரர்களின் குழுவொன்று அண்மையில் பாகிஸ்தானுக்கான விஜயத்தை மேற்கொண்டிருந்ததன் ஊடாக, இரு நாடுகளுக்கு இடையிலான மத ரீதியான சுற்றுலா பெருமளவுக்கு ஊக்கம் பெற்றுள்ளது. எனினும் மறுபுறம் பாகிஸ்தானில் பார்வையிடுவதற்கு உகந்த பல சுற்றுலாத்தளங்கள் உள்ளன. எனவே பாகிஸ்தானுக்கான மத ரீதியான சுற்றுலா மாத்திரமன்றி ஏனைய சுற்றுலாப் பயணங்களும் ஊக்குவிக்கப்பட வேண்டும்.

எந்தவொரு நாட்டுடனுமான இருதரப்பு உறவின்போது அந்தந்த நாடுகள் தமது இறையாண்மை மற்றும் சுயாதீனத்துவம் ஆகியவற்றை விட்டுக்கொடுக்காத வகையிலான கொள்கைகயைப் பேணும் பட்சத்தில் எவ்வித சிக்கல்களும் ஏற்படாது- என்றார். (ஒ.4)

# வேட்பாளர்களுக்கான கட்டுப்பணத்தில் திருத்தங்கள்



கொழும்பு,ஜூலை 16

**தேர்தலில் வேட்பாளர்கள் போட்டியிடும்போது செலுத்த வேண்டிய, கட்டுப்பணத்தில், திருத்தங்களை மேற்கொள்வதற்கான அமைச்சரவைப் பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.**

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவால் இதற்கான அமைச்சரவைப் பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என்று தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

அதனடிப்படையில், ஜனாதிபதித் தேர்தல், பொதுத் தேர்தல், மாகாண சபைத் தேர்தல் உள்ளிட்ட அனைத்து தேர்தல்களிலும் செலுத்த வேண்டிய கட்டுப்பணத் தொகையில் திருத்தங்கள் மேற்கொள்ளப்படவுள்ளன.

தேர்தலில் களமிறங்கும் சுயாதீன வேட்பாளர்கள் மாத்திரம் கட்டுப்பணம் செலுத்த வேண்டுமென்ற நடைமுறையை, அரசியல் கட்சிகளைப் பிரதிநிதித்துவப்படுத்தி களமிறங்கும் வேட்பாளர்களும் செலுத்தும் வகையில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று குறித்த அமைச்சரவை பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஜனாதிபதித் தேர்தலில் களமிறங்கும் சுயாதீன உறுப்பினர் ஒருவர் 75 ஆயிரம் ரூபா கட்டுப்பணம் செலுத்தும் நடைமுறையே தற்போது நடைமுறையிலுள்ளது.

அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்தி ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளரால் 50 ஆயிரம் ரூபா கட்டுப்பணமாகச் செலுத்தப்படுகின்றது. இந்த நிலையில், குறித்த கட்டுப்பணத் தொகையை 3 மில்லியன் ரூபா வரை அதிகரிக்குமாறு அமைச்சரவைப் பத்திரத்தில் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

தேர்தல்களில் அத்தியாவசியமின்றி வேட்பாளர்கள் களமிறங்குவதை தடுக்கும் வகையிலும், பொதுமக்களின் பெருமளவு பணம் வீணாக செலவிடப்படுவதைத் தடுக்கும் வகையிலும் கட்டுப்பணத் தொகையில் திருத்தங்கள் மேற்கொள்வதற்கான அமைச்சரவைப் பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என்று தேர்தல்கள் ஆணைக்குழு மேலும் தெரிவித்துள்ளது. (ஒ.4)

# பொலிஸாரென அடையாளப்படுத்தி பணமோசடியில் ஈடுபட்ட மூவர் கைது

கொழும்பு,ஜூலை 16

பொலிஸார் என்று தங்களை அடையாளப்படுத்தி பண மோசடியில் ஈடுபட்டனர் என்ற குற்றச்சாட்டில் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குருநாகல் மற்றும் வத்தளை ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்களே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

சந்தேகநபர் ஒருவரிமிருந்து பொலிஸ் உத்தியோகத்தரின், போலி அடையாள அட்டையொன்றும் கைப்பற்றப்பட்டுள்ளது.

சந்தேகநபர்கள் போலி அடையாள அட்டையை மக்களிடம் காண்பித்து அச்சுறுத்தல் விடுத்ததுடன், சன நெரிசல் குறைந்த பகுதியில் வைத்து அவர்களின் தங்க ஆபரணங்களையும் கொள்ளையிட்டுள்ளனர். இவ்வாறு 17 கொள்ளைச் சம்பவங்களுடன் சந்தேகநபர்கள் தொடர்புபட்டுள்ளனர். சந்தேகநபர்களிடமிருந்து 40 கிராம் தங்கம், 2 மோட்டார் சைக்கிள்கள், 2 கைவிலங்குகள் ஆகியவையும் கைப்பற்றப்பட்டுள்ளன என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ஒ.4)



# 13 வயதுச் சிறுமி துஷ்பிரயோகம் தந்தை உள்ளிட்ட ஐவர் கைது

கொழும்பு,ஜூலை 16

13 வயதுடைய சிறுமி ஒருவர் பாலியல் துஷ்பிரயோகம் செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் சிறுமியின் தந்தை உள்ளிட்ட 5 சந்தேகநபர் [illegible] பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

இந்தச் சம்பவம் நாவலப்பிட்டி பகுதியில் பகுதியில் பதிவாகியுள்ளது. இந்தச் சம்பவத்துக்கு உதவினார் என்ற குற்றச்சாட்டில் பெண் ஒருவரும் கைதுசெய்யப்பட்டுள்ளார். மேலும் 6 சந்தேகநபர்கள் தொடர்புபட்டுள்ளனர். அவர்கள் தொடர்பான விசாரணைகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ஒ.4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'சிக்னலை' தேடி ஆபத்தான இடங்களுக்கு செல்லும் சிறுவர்கள்

**கொழும்பு, ஜூலை 16**

**கொரோனாப்பெருந் தொற்றுக் காரணமாக பாடசாலைகள் மூடப்பட்டுள்ள சூழலில், இணையவழிக் கல்வியைப் பெற்றுக்கொள்வதற்காக சிறுவர்கள் மலை உச்சி, மரங்களின் உச்சி என்று ஆபத்தான இடங்களை நோக்கிச் செல்கின்றனர் என சர்வதேச ஊடகமான அல் ஜசீரா ஒளிப்படத் தொகுப்பை வெளியிட்டுள்ளது.**

ஊவா மாகாணத்தில் உள்ள கிராமம் ஒன்றை மையப்படுத்தி இந்த ஒளிப்படத் தொகுப்பு எடுக்கப்பட்டுள்ளது.

தெளிவான இணையச் சேவையைப் பெற்றுக்கொள்வதற்காக மலைகள், பாறைகள் மற்றும் மரங்களின் உச்சியை நோக்கி பாடசாலைச் சிறுவர்கள் செல்கின்றனர். இது ஆபத்தான ஒன்றாகும். இதேபோன்று ஆசிரியர்கள் தங்கள் கற்பித்தலை மேற்கொள்வதற்கும் மலைகளுக்குச் செல்லவேண்டியிருக்கின்றது.

இவ்வாறு கற்றலை மேற்கொள்ளும் மாணவர்களிடத்தில் மடிக்கணினியோ அல்லது நவீன கைபேசிகளோ சொந்தமாக இல்லை. அவர்கள் இன்னொருவருடனேயே அதனைப் பகிர்ந்துகொள்ளவேண்டிய நிலைமை காணப்படுகின்றது. இந்தக் கிராமத்து மாணவர்களின் பெற்றோர்களில் அதிகளவானோர் விவசாயிகள். மேலும், பாதுகாப்பற்ற இடங்களுக்கு இணைய சேவையைப் பெற்றுக்கொள்ளச் செல்லும் சிறுவர்களை தேடிச் செல்வதற்கு பெற்றோர்களும் இரண்டுவேளை செல்ல வேண்டி இருப்பதால் அவர்களும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர். இந்தக் கிராமத்திலிருந்து 16 கிலோ மீற்றர் தூரத்திலேயே பாடசாலை உள்ளது. அந்தப் பாடசாலை கொரோனாத் தொற்றுக் காரணமாக மூடப்பட்டுள்ளமையால் மாணவர்கள் இந்த சிரமங்களை எதிர்கொள்கின்றனர். (ஒ.சி)

# பாதுகாப்பு பல்கலை சட்டவரைபை அரசு உடனடியாக மீளப்பெறவும்

## சமூக விஞ்ஞான ஆய்வு மைய இணைப்பாளர் ஜோதிலிங்கம் வலியுறுத்து

யாழ்ப்பாணம், ஜூலை 16

ஆசிரியர்களை தனிமைப்படுத்தலில் இருந்து விடுவிப்பதுடன் பாதுகாப்பு பல்கலைக்கழக சட்டவரைபை வாபஸ் பெறவேண்டுமென சமூக விஞ்ஞான ஆய்வு மைய இணைப்பாளரும் அரசியல் ஆய்வாளருமான சி.அ.ஜோதிலிங்கம் தெரிவித்துள்ளார்.

யாழ் ஊடக அமையத்தில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்;

கொத்தலாவை பாதுகாப்பு பல்கலைக்கழக சட்டவரைபுக்கு எதிராக ஆர்ப்பாட்டம் நடத்தியமைக்காக ஆசிரியர் சங்க பொதுச் செயலாளர் ஜோசேப் ஸ்ராலின் உட்பட 19 ஆசிரியர்கள் முல்லைத்தீவு கோப்பாப்பிலவு விமானப்படைத்தள இடைத்தங்கல் முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். இது அடிப்படை உரிமை மீறலாக இருப்பதால் இதனை வன்மையாகக் கண்டிக்கிறோம்.

கொத்தலாவை பாதுகாப்பு பல்கலைக்கழக விவகாரம் இலங்கைத் தீவில் வாழும் அனைத்து மக்களும் கவனத்தில் கொள்ளவேண்டிய விவகாரமாகும். தமிழ் மக்களைப் பொறுத்தவரை நான்கு காரணங்களுக்காக இதில் அக்கறைப்படவேண்டியுள்ளது. இதில் முதலாவது கொத்தலாவை பாதுகாப்பு பல்கலைக்கழக சட்ட வரைபு ஏனைய பல்கலைக்கழக ஒழுங்கிலிருந்து விலகி தனியான பல்கலைக்கழகமாக பாதுகாப்பு அமைச்சின் கீழ் இயங்க இருக்கின்றது.

பாதுகாப்பு கற்கை நெறியைத்தவிர சமூக விஞ்ஞானம் பொறியியல் கற்கைத்துறைகளும் அங்கு இடம்பெற உள்ளன. இவ்வாறு தனியாகச் செயற்படுவது பொதுக்கல்வியைப் பாதிக்கும்.

இன்று அனைத்து பல்கலைக்கழகங்களும் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் கீழேயே இயங்குகின்றன. எனவே இச்சட்டவரைபை தடுக்க வேண்டிய பொறுப்பு தமிழ் மக்களுக்கும் இருக்கின்றது. இரண்டாவது சுகாதார விதிமுறைகளுடன் ஆர்ப்பாட்டத்தை நடாத்திய ஆசிரியர்கள் கைதுசெய்யப்பட்டமை ஒரு அடிப்படை உரிமை மீறலாகும். மூன்றாவது இலங்கை ஆசிரியர் சங்கம் தமிழ் மக்களை ஒரு தேசிய இனமாக ஏற்றுள்ளது. அதன் சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்கின்றது. இலங்கை ஆசிரியர் சங்க பொதுச்செயலாளர் ஜோசேப் ஸ்ராலின் தமிழ் மக்களின் அரசியல் நியாயப்பாடுகளுக்காக தென்னிலங்கையில் குரல் கொடுத்து வருகின்றார். போராட்டங்களை நடத்துகின்றார். எனவே தமிழ் மக்களின் நட்புச்சக்திகளாகிய இவர்களுக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டியது தமிழ் மக்களின் கடமையாகும்.

நான்காவது தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டம் வெற்றியடைய வேண்டுமானால் சிங்கள மக்களில் ஒரு பகுதியினரது ஆதரவையாவது வென்றெடுப்பது அவசியமாகும்.

இப் போராட்டத்துக்கு ஆதரவு கொடுப்பதன் மூலமும், போராட்டத்தில் பங்குபெறுவதன் மூலமும் சிங்கள மக்களோடு நாமும் நிற்கின்றோம். என்ற செய்தியை வழங்குகின்றோம். இது எதிர்காலத்தில் சிங்கள மக்களில் ஒரு பகுதியினரையாவது எமது போராட்டத்துக்கு சார்பாக வென்றெடுப்பதற்கு உதவிக்கரமாக அமையும் - என்றார். (ப-26)



# சதுர்த்தி வழிபாடும் குருபூசை நிகழ்வும்

கொக்குவில்,ஜூலை 16

கொக்குவில் யாழ்ப்பாணம் விஷன் கிருஷ்ணா அறநெறிப் பாடசாலையில் சதுர்த்தி பூசையும், மாணிக்கவாசகர் குருபூசையும் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்றன.

பூசையைத் தொடர்ந்து பாடசாலை வளாகத்தில் தெய்வீக மரங்களான நாகலிங்க பூ மரம், சந்தனமரம் மற்றும் வில்வமரம் என்பவை நடுகைசெய்யப்பட்டன. இந்தப் பூசை நிகழ்வுகளில் நல்லூர் சிவகுரு ஆதீன முதல்வர் தவத்திரு வேலன் சுவாமிகள்,கொக்குவில் இந்து ஆரம்பபாடசாலை அதிபர் திருமதி கவின்ஜா நவஜீவா மற்றும் நல்லூர் பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தர் திருமதி நகுலா ஆகியோர் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர். (ஐ)

# தேதனப்பசளை உற்பத்தி தொழிற்சாலை திறப்பு

கிளிநொச்சி, ஜூலை 16

கரைச்சி தெற்கு ப.நோ.கூ. சங்கத்தின் இயற்கைப் பசளை உற்பத்தி தொழிற்சாலை நேற்று முன்தினம் கிளிநொச்சி மாவட்டச் செயலரால் திறந்து வைக்கப்பட்டது.

கிளிநொச்சி கரைச்சி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட செல்வாநகர் பகுதியில் அமைக்கப்பட்ட தொழிற்சாலையே திறக்கப்பட்டது. 50 சிறுகைத் தொழில் திட்டத்தின் கீழ் 7.5 மில்லியன் நிதியில் குறித்த கட்டடம் நிர்மாணிக்கப்பட்டது டன், இரண்டு உழவு இயந்திரங்கள் மற்றும் பதனிடல் இயந்திரங்கள் வசதிகளும் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளது. (ப-113)

# முள்ளிவாய்க்கால் பகுதியில் போரின் எச்சங்கள் மீட்பு!

முல்லைத்தீவு,ஜூலை 16

முல்லைத்தீவு முள்ளிவாய்க்கால் பகுதியில் போரின்போது கைவிடப்பட்ட வெடிபொருள்களின் எச்சங்கள் நேற்றுமுன்தினம் மீட்கப்பட்டுள்ளன.

முல்லைத்தீவு முள்ளிவாய்க்கால் பகுதியில் தனியார் காணி ஒன்றை துப்புரவுசெய்யும்போது வெடிபொருள்கள் மாதிரியான பொருள்கள் அடையாளம் காணப்பட்டன. இது தொடர்பில் அருகில் உள்ள இராணுவத்தினருக்கு அறிவிக்கப்பட்டது.

இதனையடுத்து நீதிமன்ற உத்தரவுக்கு அமைய வெடிபொருள் அகற்றும் பிரிவினர் கிளிநொச்சியில் இருந்து வரவழைக்கப்பட்டு குறித்த பகுதி தோண்டப்பட்டது.

இதன்போது விடுதலைப்புலிகள் பயன்படுத்திய ஒருவகையான வெடிபொருள்களின் எச்சங்கள் மீட்கப்பட்டன. (ஐ-19)

# அபிவிருத்திக்கு வெட்டப்படும் குழிகளிலிருந்து வெளியேற்றப்படும் மண் யாருக்குச் சொந்தம்?

## குழப்பத்தில் மக்கள்

சாவகச்சேரி, ஜூலை 16

வீதியோரத்தில் சீரமைப்பு பணிக்காக குழிகள் தோண்டி வெளியே கொட்டப்படும் மணல் யாருக்குச் சொந்தம் என்ற குழப்பநிலை காணப்படுகிறது.

தனது காணிக்கு முன்னால் தோண்டப்படும் மணல் குடியிருப்பாளருக்குச் சொந்தமா? அல்லது உள்ளூராட்சி சபைக்குச் சொந்தமா என்ற குழப்பமே ஏற்பட்டுள்ளது. தமது காணிக்கு முன்னால் தோண்டப்படும் குழியிலிருந்து வெளியே கொட்டப்படும் மண்ணை தமது காணிக்குள் போடவேண்டும் என குடியிருப்பாளர்களும், வீதியோர பராமரிப்பு தாம் மேற்கொள்வதால் தோண்டப்படும் மண் தமக்கு சொந்தமானதென உள்ளூராட்சி சபையினரும் உரிமை கோருகின்றனர். உள்ளூராட்சி சபைகளின் எல்லைக்குட்பட்ட பகுதிகளில் குடிதண்ணீர் குழாய்கள் பொருத்துவதற்கும், வீதி மறுசீரமைப்புப் பணி மேற்கொள்ளும் வேளையில் வடிகால்கள் அமைப்பதற்கும், தொலைத்தொடர்பு இணைப்புகள் பொருத்துவதற்கும். வீதியோரங்களில் குழிகள் தோண்டப்படுகின்றன. தோண்டப்படும் குழிகளிலிருந்து வெளியேற்றப்படும் மண்ணை ஒவ்வொருவரும் உரிமை கோரி அள்ளிச் செல்கின்றனர். இதனால் வெட்டப்படும் குழிகளை மூடுவதற்கு மணல் இல்லாததால் வெளியில் விலை கொடுத்து வாங்கி குழிகளை நிரப்ப வேண்டிய நிலை பணியில் ஈடுபடுபவர்களுக்கு ஏற்பட்டுள்ளது.

உரிய காலத்தில் குழிகள் மூடப்படாவிடின் குழிகளுக்குள் வீதியோர மதில்கள் விழும் அபாயம் உள்ளதைக் காணமுடிகிறது.

இந்த நிலை நீடிக்காதிருக்க உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (ப-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒக்ரோபர் 15க்குள் நாடு இயல்புக்கு?

## இலக்கு நோக்கி அரசு

**கொழும்பு,ஜூலை 16**

**எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் 15 ஆம் திகதிக்குள் நாட்டை இயல்பு நிலைக்குக் கொண்டுவரும் இலக்குடன் தடுப்பூசித் திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது என்று இராஜாங்க அமைச்சர் சன்ன ஜயசுமன தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்,
30 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு இந்த வருடத்துக்குள் தடுப்பூசி பெற்றுக்கொடுப்பதே எமது ஆரம்ப திட்டமிடலாக இருந்தது. எனினும், ஓகஸ்ட் மாதம் 31 ஆம் திகதிக்குள் இந்த இலக்கை அடைவதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு இரு வாரங்களுக்கு முன்னர் ஜனாதிபதி எமக்குப் பணிப்புரை விடுத்தார். தற்போதைய நிலைவரப்படி அந்த இலக்கை அடையக்கூடிய மட்டத்திலேயே நாம் இருக்கின்றோம்.
ஓகஸ்ட் மாதம் 31 ஆம் திகதி இலக்கை அடைந்தால், ஒக்ரோபர் மாதம் 15 ஆம் திகதிக்குள் ஏதேனும் விதத்தில் நாட்டை இயல்பு நிலைக்குக் கொண்டுவர வேண்டும். பாடசாலைகள் திறக்கப்பட வேண்டும். ஒக்ரோபர் மாதம் 15 என்பது எமது இலக்கு. ஏனெனில் 18 தொடக்கம் 30 வயதுக்கிடைப்பட்டவர்களுக்கும் தடுப்பூசி ஏற்ற வேண்டும். அதேபோல 12 தொடக்கம் 18 வயதுக்கிடைப்பட்டவர்களுக்கான தடுப்பூசித் திட்டமும் உள்ளது- என்றார். (ஒ.4,44)

# 50 ஆயிரத்தை கடந்தது கைது

கொழும்பு,ஜூலை 16
தனிமைப்படுத்தல் உத்தரவுகளை மீறினர் என்ற குற்றச்சாட்டில் இதுவரை 50 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.
அதற்கமைவாக குறித்த குற்றச்சாட்டுக்களுக்காக கடந்த ஒக்ரோபர் மாதம் 30 ஆம் திகதி முதல் இதுவரையான காலப்பகுதியில் 50 ஆயிரத்து 27 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.
அவர்களில் 43 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் மீது வழக்குகள் தொடரப்பட்டுள்ளன.
7 ஆயிரம் பேருக்கு எதிராக வழக்குகள் தொடரப்படவுள்ளன என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார். (ஒ.4)

# எசல பெரஹரா ஏற்பாடுகள் பூர்த்தி

## கலைஞர்களுக்கு தடுப்பூசி

கொழும்பு,ஜூலை 16
பண்டைய பழக்க வழக்கங்களுக்கு ஏற்ப, கண்டி எசல பெரஹராவை வெற்றிகரமாக முன்னெடுக்க அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன. இதில் பங்கேற்கும் அனைத்து கலைஞர்களுக்கும் கொரோனாத் தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளது என்று தியவதன நிலமே பிரதீப் நிலங்க தேல தெரிவித்தார்.
கண்டி எசல பெரஹராவை நடத்துவது தொடர்பில் தலதா மாளிகையில் நடைபெற்ற கலந்துரையாடலில் அவர் இதனைத் தெரிவித்தார்.
கலைஞர்கள் மற்றும் பொதுமக்களின் பாதுகாப்பை உறுதிசெய்வதற்கு பொருத்தமான முடிவுகள் சுகாதார அதிகாரிகளின் ஆலோசனையின் பேரில் எடுக்கப்படும்.
பெரஹராவின் போது சிறப்புச் சடங்குகளுக்கு வருகை தரும் ஆதிவாசி சமூகத்தைச் சேர்ந்தவர்கள் உட்பட ஒரு குழுவினருக்கும் தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.
பெரஹராவில் காப்புக் கட்டும் நிகழ்வு எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 9 ஆம் திகதியும், கும்பல் பெரஹரா ஊர்வலம் 13 ஆம் திகதியும்,, ரந்தோலி ஊர்வலம் 22 ஆம் திகதியும், இறுதியாக தியா கெப்பீம எனப்படும் நிகழ்வுடன் பெரஹரா நிகழ்வுகள் 23 ஆம் திகதி முடிவடையும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ.4)

# குறிப்பிட்ட காலத்துக்குள் அனைவருக்கும் தடுப்பூசி

## முன்னாள் சபாநாயகர் வலியுறுத்து

கொழும்பு,ஜூலை 16
நாட்டில் கொரோனா வைரஸின் புதிய திரிபுகள், அடையாளங்காணப்படக் கூடிய சாத்தியப்பாடுகள் காணப்படுவதால், ஏற்கனவே திட்டமிட்ட காலவரையறைக்குள் நாட்டு மக்கள் அனைவருக்கும் தடுப்பூசி செலுத்த வேண்டும் என்று முன்னாள் சபாநாயகரும், சமூக நீதிக்கான தேசிய இயக்கத்தின் தலைவருமான கரு ஜயசூரிய வலியுறுத்தியுள்ளார்.
இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,
நாட்டு மக்களின் சுகாதாரப் பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டுமெனில், ஏற்கனவே திட்டமிடப்பட்ட கால வரையறைக்குள் பொதுமக்களுக்கான தடுப்பூசி வழங்கல் நடவடிக்கைகளைப் பூர்த்திசெய்ய வேண்டியது அவசியம். இருப்பினும் கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்துவதில் பொதுமக்களின் பங்களிப்பு இன்றியமையாததாகும். உரிய சுகாதாரப் பாதுகாப்பு வழிகாட்டல்களைப் பின்பற்றி அவதானத்துடன் செயற்பட வேண்டியது அவசியமாகும். மறுபுறம் இலங்கை பொருளாதார, சமூக மற்றும் சூழலியல் நெருக்கடியை நோக்கிச் சென்றுகொண்டிருக்கின்றது.
இந்த நெருக்கடியிலிருந்து மீள்வதற்கான பொதுவான செயற்றிட்டமொன்றை வகுப்பதற்கு அனைத்துத் தலைவர்களும் ஒன்றிணைய வேண்டிய நேரம் இதுவாகும். அனைத்துத் தரப்பினரும் நாட்டின் நலனுக்கு முன்னுரிமை வழங்கி செயற்படும் பட்சத்தில் ஆளுந்தரப்பா? எதிர்த்தரப்பா? என்பது குறித்துக் கவலைகொள்ளத் தேவையில்லை. மாறாக அனைவரும் ஒற்றுமையுடன் இணைந்து செயற்படுவதொன்றே முக்கியமானதாகும்- என்றார். (ஒ.4)





# 50 முதியோர்களுக்கு உலருணவுப்பொதிகள்

புங்குடுதீவு,ஜூலை 16
புங்குடுதீவைச் சேர்ந்த பொருண்மியம் நலிந்த 50 முதியோர்களுக்கு ரூபா ஒரு லட்சம் பெறுமதியான உலருணவுப் பொதிகள் வழங்கப்பட்டன.
சூழலியல் மேம்பாட்டு அமைவனத்தின் (சூழகம்) செயலாளர் கருணாகரன் நாவலன் ஏற்பாட்டில் புங்குடுதீவைச் சேர்ந்த அமரர். நாகலிங்கம் ஞானவடிவேலின் 31 ஆவது நினைவு தினத்தை முன்னிட்டு இந்த உதவிகள் வழங்கப்பட்டன. (ஐ)

# அங்கீகரிக்கப்பட்ட மூலிகை மருந்துக்கு எதிர்ப்பு சக்தி

## பேராசிரியர் தகவல்

கொழும்பு,ஜூலை 16
ஆயுள்வேத திணைக்களத்தால் அங்கீகரிக்கப்பட்ட மூலிகை மருந்தை உட்கொள்வதால், உடலிலுள்ள அடிப்படை நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்க முடியும் என்று பேராதனைப் பல்கலைக்கழகத்தின் கால்நடைகள் மற்றும் விலங்கியல்பீடத்தின் சிரேஷ்ட பேராசிரியரான ஜயந்த ராஜபக்ச தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவிக்கையில்,
தேசிய ஔடதங்கள் பலவற்றின் சேர்க்கையின் மூலமாக உடலின் நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரித்துக் கொள்வது சம்பந்தமாக நடத்தப்பட்ட ஆய்வில் இது உறுதிப்படுத்தப்பட்டது. இந்த மூலிகை மருந்தானது, உடலில் வேகமாக பரவக்கூடிய வைரஸ்க்கள் மற்றும் பக்றீரியாக்கள் ஆகியவற்றின் தொற்றுகளுக்கு எதிராக போராடி உடலைப் பாதுகாப்பதற்கான எதிர்ப்பு சக்தியை அதிகரித்துக்கொள்ளக்கூடிய ஆற்றல் உள்ளது. சமூகத்தில் வேகமாகப் பரவிவரும் பல்வேறு விதமான வைரஸ் தொற்றுக்ளிலிருந்து பாதுகாத்துக்கொள்வதற்கு உடலில் நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரித்துக்கொள்ள வேண்டும். தற்போது கொவிட் தடுப்பூசி ஏற்றிக்கொள்வது, கொரோனா எனும் வைரஸ் தொற்றிலிருந்து பாதுகாத்துக் கொள்வதற்காகவே மாத்திரமே.
ஏதேனும் கண்டறிப்பட்ட வைரஸ் தொற்றிலிருந்து பாதுகாத்துக்கொள்வதற்காக, அதனைத் தடுக்கும் விதமாக தடுப்பூசிகள் ஏற்றப்பட்டு வருகின்றன. எனினும், பொதுவாக உடலில் நோய் எதிர்ப்புச் சக்தியை அதிகரித்துக்கொண்டால், எந்தவிதமான வைரஸ் அல்லது பக்றீரியா தொற்றிலிருந்தும் பாதுகாப்பாக இருக்க முடியும். நாம் இந்த ஆய்வில் இரண்டு விதமான பரிசோதனைகளை நடத்தியிருந்தோம். முதலாவது பரிசோதனையில், இது உடலுக்கு எந்தவொரு பாதகமான விளைவுகளை ஏற்படுத்தாது என்றும். இரண்டாவது பரிசோதனையில், உடலில் நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கச்செய்யும் என்றும் உறுதிப்படுத்தினோம்.
எமது பரம்பரை அடிப்படையில் எமக்கான நோய் எதிர்ப்புச் சக்தி கிடைக்கின்றது- என்றார். (ஒ.4)

# மாமாங்கம் விடுவிப்பு

மட்டக்களப்பு,ஜூலை 16
மட்டக்களப்பு, மண்முனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மாமாங்கம் கிராம அலுவலர் பிரிவு, தனிமைப்படுத்தலில் இருந்து நேற்றுக் காலையுடன் விடுவிக்கப்பட்டுள்ளது என்று கொவிட்-19 தடுப்புக்கான தேசிய செயற்பாட்டு மையம் தெரிவித்துள்ளது. (ஒ.4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைபர் பாலியல் குற்றங்கள் 300 சதவீதத்தால் அதிகரிப்பு

**கொழும்பு, ஜூலை 16**

**இலங்கையில் கொரோனா பரவல் ஆரம்பித்த பின்னர் பெண்கள் மற்றும் சிறுவர்களுக்கு எதிரான இணையம் ஊடான பாலியல் குற்றங்கள் 300 சதவீதத்தால் அதிகரித்துள்ளன என, சிறுவர் மற்றும் பெண்கள் உரிமை தொடர்பில் போராடும் அமைப்புக்கள் தெரிவித்துள்ளன.**



இணையம் ஊடான பாலியல் குற்றங்களைத் தடுப்பதற்கும் அதனால் பாதிக்கப்பட்டவர்களுக்கு விரைந்து நீதியைப் பெற்றுக் கொடுப்பதற்கும் புதிய சட்ட வழிகாட்டல்கள் உருவாக்கப்படவேண்டும் என்று பெண்கள் மேம்பாட்டு அறக்கட்டளையின் அமைப்பாளர் திருமதி பண்டார மெனிகே வலியுறுத்தியுள்ளார்.

கொரோனா பரவல் காரணமாக பாடசாலை மாணவர்கள் இணையச் செயலி ஊடான கற்றல் நடவடிக்கைகளுக்கு மாற்றப்பட்ட பின்னரே இத்தகைய குற்றங்கள் அதிகரித்துள்ளன எனவும் அவர் சுட்டிக்காட்டுகின்றார். (ஓ.சி)

# கடல் மார்க்கமாக போதை கடத்தல்

## சந்தேகநபர் கைது

கொழும்பு,ஜூலை 16

கடல் மார்க்கமாக பபி என்ற போதைப்பொருளைக் கடத்தி, விற்பனையில் ஈடுபட்டார் என்ற குற்றச்சாட்டில் சந்தேகநபர் ஒருவர் தங்காலையில் கைதுசெய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸ் போதைப்பொருள் தடுப்புப் பணியக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

36 வயதான சந்தேகநபர் டுபாயில் வசித்து வரும் போதைப்பொருள் கடத்தல் காரரான ஹரக் கட்டா என்றழைக்கப்படும் நதுன் சிந்தன எனப்படும் நபருக்கு சொந்தமான போதைப்பொருள்களை கடல் மார்க்கமாக நாட்டுக்குள் கொண்டுவருபவர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

போதைப்பொருள்களைத் தவிர, துப்பாக்கிகளையும் இவர் நாட்டுக்குக் கொண்டுவந்துள்ளார் என்பது விசாரணையில் தெரிய வந்துள்ளது. (ஓ.4)

# ஜனாதிபதி சட்டத்தரணிகளாக எழுவர் நியமனம்

கொழும்பு,ஜூலை 16

சட்டமா அதிபர் திணைக்களத்தின் ஏழு மேலதிக சொலிஸ்டர் ஜெனரல்கள், ஜனாதிபதி சட்டத்தரணிகளாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

அரசமைப்பின் (ஏ) பிரிவின் கீழ் சட்டத்தரணி தொழில்வாண்மையின் விசேட தர நிலைக்கு உயர்ந்துள்ள, தொழில் நடவடிக்கைகளில் நேர்மையானவர்கள் மற்றும் சிறப்பு வாய்ந்தவர்களை ஜனாதிபதி சட்டத்தரணிகளாக நியமிக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டுள்ளது.

அதனடிப்படையில் சட்டமா அதிபர் திணைக்களத்தின் சொலிஸ்டர் ஜெனரல்களான மிலிந்த குணதிலக, ஹரிப்பிரியா ஜயசுந்தர, விக்கும் ஆப்ரூ, சானக்க விஜேசிங்க, ரவீந்தர பத்திரனகே,நெரின் புள்ளே மற்றும் சேத்திய குணசேகர ஆகியோர் ஜனாதிபதி சட்டத்தரணிகளாக ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் ஜனாதிபதி சட்டத்தரணிகளாக விரைவில் சத்தியப்பிரமாணம் செய்துகொள்வர். இவர்களுக்கான நியமனங்கள் உயர்நீதிமன்ற பதிவாளரிடம் கையளிக்கப்பட்டுள்ளன. (ஓ.4)



# மஹிந்தவின் அமைச்சுக்கு அனு பெல்பிட நியமனம்

கொழும்பு,ஜூலை 16

பொருளாதார கொள்கைகள் மற்றும் திட்ட செயற்படுத்துகை அமைச்சின் செயலாளராக, அனுஷ பெல்பிட, பிரதமர் மஹிந்த ராஜபக்சவால் நியமிக்கப்பட்டுள்ளார்.

ஜனாதிபதியின் உதவிச் செயலாளர் உள்ளிட்ட பலதரப்பட்ட பதவிகளை இவர் ஏற்கனவே வகித்துள்ளார். 34 வருடங்கள் அரச சேவை அனுபவமுடையவர்.

கடந்த மாதம் அரச சேவையில் இருந்து ஓய்வுபெற்ற இவரை, அரசமைப்பின் 52(1) உபபிரிவின் அதிகாரங்களுக்கு அமைவாக, ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச, பொருளாதார கொள்கைகள் மற்றும் திட்ட செயற்படுத்துகை அமைச்சின் செயலாளராக நியமிக்க ஆலோசனை வழங்கினார். அதற்கமைவாக பிரதமர் மஹிந்த ராஜபக்சவால், அமைச்சின் செயலாளர் நியமனம் இவருக்கு வழங்கப்பட்டுள்ளது. (ஓ.4)

# ஓகஸ்ட் முதலாம் திகதி பொலித்தீனுக்கு தடை

கொழும்பு,ஜூலை 16

மக்காத பொலித்தீன் (லஞ்சீர்) உற்பத்தி செய்தல் மற்றும் விநியோகித்தல் ஆகியவற்றுக்கு ஓகஸ்ட் முதலாம் திகதி முதல் தடை விதிக்கப்பட்டுள்ளது என்று சுற்றாடல் அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தற்போது உற்பத்தி செய்திருப்பவற்றை விற்பனை செய்வதற்காக ஒரு மாதம் நிவாரண காலம் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும். அதன் பின்னர் உற்பத்தி, விற்பனை மற்றும் பாவனைக்கு மக்கும் உற்பத்திகளையே பயன்படுத்த முடியும்.

இது தொடர்பில் மத்திய சுற்றாடல் அதிகார சபை மற்றும் நுகர்வோர் சேவை அதிகார சபையால் சுற்றிவளைப்புகள் மேற்கொள்ளப்படும்.

தடை உத்தரவை மீறி எவராவது உற்பத்தி செய்தல் மற்றும் விநியோகித்தல் நடவடிக்கைகளை மேற்கொண்டால், அவர்களுக்கு எதிராக கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

நாட்டில் நாளாந்தம் லஞ்சீர் பாவனை 12 மில்லியனில் இருந்து 15 மில்லியன் வரை அதிகரித்துள்ளது. அவற்றில் 99 வீதமானவை மீள் சுழற்சி செய்யப்படாது சுற்றுப்புற சூழலுக்குக் கைவிடப்படுகின்றன.

அத்துடன் மக்கும் லஞ்சீர் தற்போது 10 தொழிற்சாலைகள் ஊடாக உற்பத்திசெய்யப்பட்டு வருகின்றது. அந்தத் தொழிற்சாலைகள் மக்காத லஞ்சீர் உற்பத்தி செய்தால், அவர்களது அனுமதிப் பத்திரத்தைத் தடை செய்ய நடவடிக்கை எடுப்போம்- என்றார். (ஓ.4)

# ரயில் கட்டுப்பாட்டாளரை தாக்கினரென இருவர் கைது

கொழும்பு,ஜூலை 16

முகக்கவசம் அணியாது ரயிலில் ஏற முற்பட்ட இருவரை எச்சரித்து முகக்கவசம் அணியுமாறு வலியுறுத்திய, ரயில் கட்டுப்பாட்டாளரை தாக்கினர் என்ற குற்றச்சாட்டில் இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

வாதுவையில் இருந்து ராகமை நோக்கிப் பயணித்த ரயில், தெஹிவளை ரயில் நிலையத்தில் நிறுத்தப்பட்டுள்ளது.

இதன்போது முகக்கவசம் அணியாது இருவர் ரயிலில் ஏற முற்பட்டுள்ளனர். இதனை தடுத்து முகக்கவசம் அணியுமாறு குறித்த கட்டுப்பாட்டாளர் வலியுறுத்தியுள்ளார்.

இதன்போதே குறித்த இருவரும் தாக்கியுள்ளனர். சம்பவம் தொடர்பில் அளிக்கப்பட்ட முறைப்பாட்டுக்கு அமைவாக இளைஞர்கள் இருவரும் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ஓ.4)

# ஒன்று வாங்கினால் இன்னொன்று இலவசம்

## சுற்றுலாவிகளை கவர புதிய திட்டம்

கொழும்பு.ஜூலை 16

வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கும் வகையில் பல திட்டங்களை செயற்படுத்த சுற்றுலாத்துறை அமைச்சு அவதானம் செலுத்தியுள்ளது.

ஒன்று வாங்கினால், இன்னொன்று இலவசம் போன்ற பொதிகளை வழங்குவது தொடர்பில் விமான சேவை நிறுவனங்களுடன் கலந்துரையாடல்கள் இடம்பெற்று வருகின்றன என்று சுற்றுலாத்துறை அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

சுற்றுலாப் பயணிகளை நாட்டுக்குள் அனுமதிக்கும் வகையில் எல்லைக் கட்டுப்பாடுகளை தளர்த்துவதற்கு எதிர்பார்த்துள்ளோம். இலங்கையில் விதிக்கப்பட்ட பயணத் தடையின்போது வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளுக்கு தடை விதிக்கப்படவில்லை. மாறாக மட்டுப்படுத்தப்பட்ட அளவில் முன்னெடுக்கப்பட்ட செயன்முறையானது தற்போது விரிவுபடுத்தப்படவுள்ளது.

எல்லைகளை மீண்டும் திறப்பதற்கு முன்னர் சுற்றுலாத்துறையுடன் தொடர்புபட்ட அனைத்து தரப்பினருக்கும் கொரோனாத் தடுப்பூசியை வழங்கத் திட்டமிட்டுள்ளது.

இலங்கைக்கு சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கும் வகையிலான ஊக்குவிப்புத் திட்டங்களை வழங்குவது குறித்து ரஷ்யா மற்றும் மத்திய கிழக்கில் உள்ள தூதரகங்களுடனும் கலந்துரையாடல்களை மேற்கொண்டுள்ளோம்.

இந்த மாத இறுதிக்குள் கலந்துரையாடல்களை நிறைவுசெய்து, திட்டங்களை உடனடியாக செயற்படுத்த எதிர்பார்த்துள்ளோம்- என்றார். (ஓ.4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை ஐக்கிய தேசியக் கட்சி ஆதரிக்காது

**கொழும்பு, ஜூலை 16**

**அமைச்சர் உதய கம்மன்பிலவுக்கு எதிராக முன்வைக்கப்பட்டுள்ள நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை ஐக்கிய தேசியக் கட்சி ஆதரிக்காது என்று தெரியவருகின்றது.**

எரிபொருள் விலையேற்றத்தைத் தொடர்ந்து அமைச்சர் கம்மன்பிலவுக்கு எதிராக ஐக்கிய மக்கள் சக்தியால் நம்பிக்கையில்லாத் தீர்மானம் முன்வைக்கப்பட்டது. இந்த தீர்மானம் மீதான வாக்கெடுப்பு அடுத்த வாரம் நாடாளுமன்றில் இடம்பெறவுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சி சார்பில் நாடாளுமன்ற உறுப்பினராக அந்தக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க மாத்திரமே உள்ளார். அவர் கட்சியின் மூத்த உறுப்பினர்களுடன் ஆலோசனை நடத்தியுள்ளார். கொண்டுவரப்பட்டுள்ள நம்பிக்கையில்லாத் தீர்மானம் ஊடாக அரசுக்குள் உள்ள பிளவுகள் தீர்வதற்கான வழிதான் ஏற்படுமே தவிர தீர்மானம் வெற்றிபெறாது என்று மூத்த உறுப்பினர்கள் கருதுகின்றனர். இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை அரசுக்கு எதிரானதாக முன்வைத்தால் அதனை ஐக்கிய தேசியக் கட்சி ஆதரிக்கலாம் என்றும் அவர்கள் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு தெரிவித்துள்ளனர். (ஒ,சி)



## யால தேசிய பூங்காவை கைப்பற்ற அரசு முயற்சி

கொழும்பு,ஜூலை 16

யால தேசிய பூங்காவில் 12 ஆயிரம் ஏக்கர் நிலத்தைக் கைப்பற்றி,வேறு விடயங்களுக்காகப் பயன்படுத்த அரசு திட்டமிட்டுள்ளது என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில், சுற்றுலா வாகனச் சாரதிகள் சங்கத்தினருடன் நடந்த கூட்டத்தில் அவர் இதனைத் தெரிவித்தார்.

பெறுமதிமிக்க சுற்றுச்சூழல் அமைப்பான யால தேசிய பூங்காவைப் பாதுகாப்பது அனைவரதும்பொறுப்பாகும். யாலபூங்காவில் அரசு ஏதாவதொரு சட்ட விரோத நடவடிக்கைக்குச் சென்றால், அதற்கு எதிராக ஐக்கிய மக்கள் சக்தி முன்நிற்கும் என்றும் அவர் தெரிவித்தார். (ஒ,4)

## ஏழு நாடுகளின் தூதுவர்கள் நிதியமைச்சருடன் சந்திப்பு

கொழும்பு,ஜூலை 16

ஏழு நாடுகளின் தூதுவர்கள், நிதியமைச்சர் பஸில் ராஜபக்சவை நேற்றுமுன்தினம் சந்தித்தனர்.

அமெரிக்கா, சீனா, இந்தியா, ரஷ்யா, பிரிட்டன், ஜேர்மனி உள்ளிட்ட ஐரோப்பிய ஒன்றிய நாடுகளின் இராஜதந்திரிகள் சந்திப்பில் கலந்துகொண்டனர்.

பிளவுபடாத வெளிவிவகாரக் கொள்கையை முன்னெடுத்துச் செல்லல், உலகில் அனைத்து நாடுகளுடனும் பொருளாதாரம் உள்ளிட்ட அனைத்து துறைகளிலும் ஒத்துழைப்புடன் செயற்படுதல் ஆகியவை இலங்கை அரசின் கொள்கை என்று நிதியமைச்சர் சந்திப்பில் தூதுவர்களிடம் சுட்டிக்காட்டினார். (ஒ,4)



# உதயவுக்கு எதிரான பிரேரணை தோல்வி

## ரணதுங்க நம்பிக்கை

கொழும்பு,ஜூலை 16

வலுசக்தி அமைச்சர் உதய கம்மன்பிலவுக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணை, மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலத்துடன் தோற்கடிக்கப்படும் என்று சுற்றுலாத்துறை அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

எரிபொருள் விலையேற்றத்தைத் தொடர்ந்து வலுசக்தி அமைச்சர் உதய கம்மன்பிலவுக்கு எதிராக ஐக்கிய மக்கள் சக்தியினர் நாடாளுமன்றில் சமர்ப்பித்த நம்பிக்கையில்லா பிரேரணை எதிர்வரும் வாரம் விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது.

நம்பிக்கையில்லா பிரேரணையில் உள்ளடக்கப்பட்டுள்ள காரணிகள் அடிப்படையற்றவை. இந்த நம்பிக்கையில்லா பிரேரணையை மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலத்துடன் தோற்கடிப்போம். இந்த விடயத்தில் ஆளும் தரப்பின் உறுப்பினர்கள் அனைவரும் ஒருமித்த கொள்கையில் உள்ளனர். உலக சந்தையில் எரிபொருள் விலை அதிகரிக்கும்போது தேசிய மட்டத்தில் எரிபொருளின் விலையை அதிகரிக்க வேண்டிய தேவை காணப்படுகின்றது.



அரசுக்குள் முரண்பாடுகள் காணப்படுகின்றன என்று ஒரு தரப்பினர் கூறுகின்றனர். தனிப்பட்ட பிரச்சினைகளை அரசினதும், கூட்டணியினதும் முரண்பாடு என்று கருத முடியாது. பிரச்சினைகள் உள்ளன என்று குறிப்பிட்டுக் கொள்பவர்களின் அரசியல் உள்நோக்கங்கள் அறியப்பட்டுள்ளன - என்றார். (ஒ,4)

*அறிவிப்பை மீறி*

# இரகசியமான முறையில் பொருள்கள் இறக்குமதி

*ஐ.ம.சக்தி குற்றச்சாட்டு*



கொழும்பு,ஜூலை 16

அரசு கொள்கைகளின் பிரகாரம் பல்வேறு பொருள்களது இறக்குமதியை இடைநிறுத்தியுள்ளோம் என்று அறிவித்தது. எனினும் அதே பொருள்களை இரகசியமான முறையில் இறக்குமதிசெய்து நாட்டுக்குள் கொண்டுவருகின்றது. இந்த மறைமுகமான செயற்பாடு எதற்கு?

இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார கேள்வி எழும்பியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

பயிர்ச்செய்கைக்கு அவசியமான உரம் தொடர்பில் அரசால் கடைப்பிடிக்கப்படும் கொள்கையானது அண்மைக்காலத்தில் முக்கிய பேசுபொருளாக மாறியுள்ளது. உர இறக்குமதியை நிறுத்தி, அதற்குப் பதிலாக எமது நாட்டிலேயே சேதன உரத்தை உற்பத்தி செய்வோம் என்று அறிவித்திருந்தது.

இருப்பினும் கடந்த திங்கட்கிழமை பெருமளவு மெற்றிக் தொன் உரம் துறைமுகத்தை வந்தடைந்துள்ளது. நாட்டிலுள்ள சாதாரண விவசாயிகளுக்கும், பயிர்ச்செய்கையாளர்களுக்கும் அவசியமான உரத்துக்குப் பற்றாக்குறை ஏற்பட்டிருக்கும் நிலையில், துறைமுகத்தை வந்தடைந்திருக்கும் உரம் யாருக்காகக் கொண்டுவரப்பட்டுள்ளது? உர மாஃபியாவை முன்னெடுத்துச் செல்லல் போன்ற நோக்கங்களுக்காக இரகசியமாக உரம் இறக்குமதி செய்யப்பட்டிருக்கின்றதா? என்ற சந்தேகம் எழுந்துள்ளது.

அடுத்ததாக அரிசி வகைகளுக்கான உயர்ந்தபட்ச கட்டுப்பாட்டு விலை நிர்ணயிக்கப்பட்டுள்ளது. எனினும் அது நடைமுறையில் இருக்கின்றதா?. நிர்ணய விலையிலிருந்து விடுபடுவதற்காக மொத்த வியாபாரிகள் பல்வேறு உத்திகளைக் கையாளுகின்றனர். அதன் விளைவாக சில்லறை வியாபாரிகளும், நுகர்வோரும் வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளனர்.

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை 'பொம்மை' என்று வர்ணித்தவர்கள் இப்போது டட்லி சிறிசேனவின் முன்பு 'பொம்மையாகி' இருக்கின்றனர். நாட்டின் மொத்த அரிசி வியாபாரிகளில் முக்கியமான பலர் அரசின் பிரதிநிதிகளுடனேயே இருக்கின்றனர். ஆகவே வெகுவிரைவில் ஏற்படப்போகும் உரப்பற்றாக்குறைக்கு அரசு எத்தகைய தீர்வை வழங்கப்போகின்றது என்பது குறித்து தெளிவுபடுத்த வேண்டும்.

மறுபுறும் சர்ச்சைக்குரிய எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் விவகாரத்தை அரசு திட்டமிட்டு மூடிமறைப்பதற்கு முற்படுகின்றது.

அடுத்ததாக உயிர்த்த ஞாயிறு தின பயங்கரவாதத் தாக்குதல்கள் தொடர்பில் கர்தினால் மீண்டும் முக்கியமானதொரு கருத்தை வெளியிட்டிருக்கின்றார். இந்தத் தாக்குதல்களின் பின்னாலிருக்கும் உண்மையான சூத்திரதாரிகளைக் கண்டறிந்து தண்டனை வழங்குவதற்கான நிலைப்பாட்டை அரசு கொண்டிருக்கவில்லை என்று நாம் கடந்த காலத்திலிருந்து தொடர்ச்சியாகக் கூறி வருகின்றோம். தாக்குதல்களுக்கான திட்டத்தை வகுத்த பிரதான சூத்திரதாரிகளைக் காப்பாற்றுவதே அரசின் நோக்கமாகும்.

இவ்வாறானதொரு சூழ்நிலையில் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகையால் ஏற்படுத்தப்படக்கூடிய அழுத்தங்களிலிருந்து தப்புவதற்காகவே ரிஷாட் பதியுதீனை சிறையில் அடைத்துள்ளனர் - என்றார். (ஒ,4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை அகதிகளுக்கு இந்தியக் குடியுரிமை!

## உயர்நீதிமன்றத்தில் மனு



சென்னை, ஜூலை 16

**இலங்கையில் இருந்து தமிழகம் வந்தவர்கள் 2019ஆம் ஆண்டு குடியுரிமை சான்று கேட்டு அளித்த விண்ணப்பங்களின் தற்போதைய நிலை குறித்து மத்திய அரசு பதிலளிக்க வேண்டுமென்று உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.**

திருச்சி கொட்டப்பட்டு இலங்கை அகதிகள் முகாமில் தங்கியிருக்கும் 65 பேர், தங்களை இலங்கை அகதிகளாகக் கருதாமல், தாயகம் திரும்பியவர்களாகக் கருதி இந்திய குடியுரிமை வழங்க மத்திய அரசுக்கு உத்தரவிடக்கோரி உயர் நீதிமன்றக் கிளையில் 2009ஆம் ஆண்டு மனு தாக்கல் செய்தனர்.

இந்த வழக்கை விசாரித்த உயர் நீதிமன்றம், மனுதாரர்கள் இந்திய குடியுரிமை கேட்டு புதிதாக அந்தந்த மாவட்ட ஆட்சியர்களிடம் விண்ணப்பிக்க வேண்டும். ஆட்சியர்கள் தாமதப்படுத்தாமல் விண்ணப்பங்களை மத்திய அரசுக்கு அனுப்ப வேண்டும். மத்திய அரசு 16 வாரத்தில் உரிய உத்தரவு பிறப்பிக்க வேண்டும் என 2019ஆம் ஆண்டு ஜூன் 17ஆம் திகதி உத்தரவிட்டது.

இந்த உத்தரவை நிறைவேற்றாததால் மத்திய வெளியுறவுத்துறை செயலர் ஹர்ஷ வர்தன் ஷெர்ங்ளா, உள்துறை அமைச்சர் அஜய்குமார் பல்லா, திருச்சி மாவட்ட ஆட்சியர் சிவராசு ஆகியோர் மீது நீதிமன்ற அவமதிப்பு நடவடிக்கை எடுக்கக் கோரி சுப்பிரமணியம் என்பவர் உயர் நீதிமன்றக் கிளையில் மனு தாக்கல் செய்தார்.

இந்த மனு நீதிபதி ஜி.ஆர்.சுவாமிநாதன் முன்பு விசாரணைக்கு வந்தது. தமிழக அரசு சார்பில், மனுதாரர்கள் இந்திய குடியுரிமை கேட்டு அளித்த விண்ணப்பங்கள் மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டது எனத் தெரிவிக்கப்பட்டது. மனுதாரர் சார்பில் வழக்கறிஞர்கள் ஹென்றி டிபேன், ஆர்.கருணாநிதி ஆகியோர் வாதிட்டனர்.

பின்னர் நீதிபதி, திருச்சி மாவட்ட ஆட்சியர் அனுப்பிய விண்ணப்பங்களின் தற்போதைய நிலை குறித்து மத்திய அரசு தெரிவிக்க வேண்டும். தவறினால் மத்திய அரசு அதிகாரிகளுக்கு நீதிமன்ற அவமதிப்பு நோட்டீஸ் அனுப்பப்படும் என உத்தரவிட்டு, விசாரணையை 2 வாரங்களுக்கு தள்ளிவைத்தார். (எ-இ)



# நீர்மூழ்கிகளை அழிக்கும் விமானம் இந்தியாவிடம்!

புதுடில்லி, ஜூலை 16

நீர்மூழ்கிக் கப்பலை தாக்கி அழிக்கவல்ல பி8ஐ போர் விமானம் இந்தியாவுக்கு கொண்டுவரப்பட்டுள்ளது. இது தொடர்பாக பாதுகாப்பு அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது

கடந்த 2016 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தின் அடிப்படையில் 2ஆவது போர் விமானம் இந்தியாவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. கடல் பாதுகாப்பில் முக்கிய பங்கு வகிப்பதோடு மட்டுமல்லாமல், பேரிடர் மீட்புப் பணிகளிலும் பி8ஐ போர் விமானங்கள் ஈடுபடுத்தப்பட்டு வருகின்றன. போர் விமானங்களை இயக்குவதில் இந்திய கடற்படையினருக்கு போயிங் நிறுவனமே பயிற்சி அளித்து வருகிறது.

அந்தப் போர் விமானங்களுக்குத் தேவையான உபகரணங்கள், பராமரிப்பு சேவைகள் உள்ளிட்டவற்றையும் அந்த நிறுவனமே வழங்கி வருகிறது - என்றுள்ளது. (எ-இ)

# வானமே எல்லை: ரஷ்யா தெரிவிப்பு

புதுடில்லி, 16


இந்தியா ரஷ்யாவுக்கு இடையிலான உறவின் விரிவாக்கத்துக்கு வானமே எல்லை என இந்தியாவுக்கான ரஷ்ய தூதர் நிகோலே குடாசேவ் குறிப்பிட்டுள்ளார்.

இந்தியா ரஷ்யா இடையே நடைபெறவுள்ள உச்சி மாநாட்டுக்கான ஏற்பாடுகள் குறித்து இருதரப்பு அமைச்சர்கள் பங்கேற்ற கூட்டம் டெல்லியில் நடைபெற்றது. இதன் போது கருத்து தெரிவித்த அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது

இந்த ஆண்டின் பிற்பகுதியில் நடைபெறவுள்ள இந்த மாநாட்டில் வர்த்தகம், பொருளாதாரம், பாதுகாப்பு தொடர்பாக சர்வதேச அளவிலான விவகாரங்கள் குறித்தும் பேசப்படும். இந்த மாநாடு இரு நாடுகளுக்கிடையே பெரிய அத்தியாயமாக இருக்கும். மேலும் கொவிட் பரவலை தடுப்பது தொடர்பான விவாதமும் இந்த மாநாட்டின் முக்கிய நோக்கமாக இருக்கும்.

தொற்றுக்கு எதிராக ரஷ்யாவால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள ஸ்புட்னிக் லைட் தடுப்பூசி இந்தியாவில் விரைவில் அறிமுகப்படுத்தப்படும். ஒட்டுமொத்தமாக ரஷ்யா இந்தியா இடையே ஒத்துழைப்பிலும், உறவின் விரிவாக்கத்திலும் வானமே எல்லையாக உள்ளது- என்றார். (எ-இ)



# மகாராஷ்டிராவில் சிவப்பு எச்சரிக்கை

புதுடில்லி, ஜூலை 16

மகாராஷ்டிராவின் பல்வேறு மாவட்டங்களுக்கு சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

மும்பை, தானே, புனே, கோலாப்பூர், சதாரா, ரத்னகிரி, ராய்காட் உள்ளிட்ட மாவட்டங்களில் 24 மணி நேரத்தில் மிக பலத்த மழை பெய்யும் என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அதையடுத்தே மாநிலங்களுக்கு சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. அதேநேரம் எதிர்வரும் நாட்களில் மழையுடனான காலநிலை குறைவடையும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

# இமாச்சலத்தில் வெள்ளம் 13 பேர் இதுவரை மாயம்!

புதுடில்லி, ஜூலை 16

இமாச்சலப் பிரதேசத்தில் தொடர்ச்சியாக பெய்த கனமழை காரணமாக 13 பேர் காணாமல்போயுள்ளனர் என்றும் அந்தப் பகுதியில் மீட்புப் பணிகள் முடுக்கி விடப்பட்டுள்ளன என்றும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

அதேநேரம் சுற்றுலாப் பயணிகள் மலைப்பகுதிகளுக்கு வரவேண்டாம் என அறிவுறுத்தப்பட்டுள்ளது. வெள்ளப்பெருக்கு அதிகமாக இருப்பதால் கரையோரங்களுக்கு செல்ல வேண்டாம் எனவும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

அதேவேளை, இமாச்சல பிரதேசத்துக்கு தேவையான அனைத்து உதவிகளும் வழங்கப்படும் என பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளார். (எ-இ)



# நீட் தேர்வை நிறுத்த கோரிக்கை

சென்னை, ஜூலை 16

நீட் தேர்வில் இருந்து தமிழகத்துக்கு விலக்கு அளிக்க கோரி ஒன்றிய அமைச்சரிடம் மா.சுப்பிரமணியன் கோரிக்கை மனு கையளித்துள்ளார். டெல்லி சென்றுள்ள மருத்துவ அமைச்சர் மா.சுப்பிரமணியன், ஒன்றிய கல்வி அமைச்சர் தர்மேந்திரா பிரதானிடம் இந்த விடயம் தொடர்பாகக் கலந்துரையாடியுள்ளார்.

அத்துடன் தமிழ்நாட்டுக்கு தடுப்பூசியை அதிகப்படுத்தி வழங்க வேண்டும், செங்கல்பட்டு தடுப்பூசி மையத்தை உடனடியாகத் திறக்க வேண்டும் என்பது உள்ளிட்ட 13 கோரிக்கைகளையும் அவர் முன்வைத்துள்ளார். (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# VACANCIES
# UNIVERSITY OF JAFFNA SRI LANKA

University of Jaffna will entertain applications from qualified persons for the under mentioned post up to **28.07.2021.**

**Post of Temporary Research Assistants**

**"A.S.Thambiah Endowment Chair in Oncology - Faculty of Medicine, University of Jaffna"**

| Post | Salary scale |
|---|---|
| **Temporary Research Assistants** | **Rs.49,860/- (Fixed) pm** |

Qualifications:-

1. Should have the basic degree in the field of health care and havingUndergraduate research experience in health research.

I. A First or Second class (Upper Division) in a basic degree Examination in the relevant subject.

**OR**

II. A Second class ( Lower Division) in a basic degree Examination in the relevant subject.

**OR**

III. An ordinary pass in the B.ScSpecial Degree Examination in the relevant subject.

**OR**

IV. An ordinary pass in the B.Sc General Degree Examination with a recognized postgraduate qualification in the relevant subject

**Note :*Having research experience in the field of oncology will be preferable.***

Perfected applications shall be sent to the **Senior Assistant Registrar / Faculty of Medicine, University of Jaffna, Adiyapatham Road, Kokuvil, Jaffna.**

Application forms will be available in the Faculty website http://www.med.jfn.ac.lk/wp-content/uploads/2021/01/APPLICATION-Form.pdf.Those who wish to send the application forms downloaded from the Faculty website should accompany with the paid Bank Slip for the deposit of a sum of Rs. 100/- credited to the Peoples Bank Account No: **162-1-001-6-0000880**(*Ref number should be mentioned:* 970000090000387) of Bursar, University of Jaffna.

Application forms and other details may be obtained from the office of the Senior Assistant Registrar / Faculty of Medicine, University of Jaffna, Sri Lanka, on a payment of Rs. 100 / - per application form. Those who wish to obtain application forms by post are requested to send a self - addressed stamped envelope 23x10 cm in size along with the paid Bank Slip to the above address.

Applicants from the University System/Government Departments/Corporations and Statutory Board should channel their applications through the Head of respective Institutions, but may send an advance copy in the first instance. However, no such applicant will be considered for interview, if the application channeled through the Head of the Department is not received.

Illegible & incomplete applications, and applications received by the University after the closing date will be rejected without intimation. Only short-listed applicants will be called for an interview.

**REGISTRAR**
**UNIVERSITY OF JAFFNA**
**SRI LANKA**
**14.07.2021**

மெஸ்ஸி - பார்சிலோனா

# அடுத்த 5 ஆண்டுகளுக்கு நீடிக்கப்பட்டது ஒப்பந்தம்!

ஸ்பெய்ன், ஜூலை 16

பார்சிலோனா - மெஸ்ஸி இடையிலான ஒப்பந்தம் அடுத்த 5 ஆண்டுகளுக்கு நீடிக்கப்பட்டது. இதன்படி 2026ஆம் ஆண்டு பருவகாலம் வரையில் மெஸ்ஸி பார்சிலோனாவில் விளையாடுவார்.

உலகின் சிறந்த கால்பந்து வீரர்களில் ஒருவர் மெஸ்ஸி. ஆர்ஜென்ரீனாவைச் சேர்ந்த அவர் ஸ்பெய்னின் பார்சிலோனா கழகத்துக்காகவும் விளையாடி வருகின்றார். 34 வயதாகும் மெஸ்ஸி கடந்த 21 ஆண்டுகளாக பார்சிலோனாவுக்காக விளையாடி வருகின்றார். இந்த நிலையில் அண்மையில் மெஸ்ஸி, பார்சிலோனா இடையிலான ஒப்பந்தம் முடிந்தது. இதையடுத்து மெஸ்ஸி எந்த அணிக்கும் சொந்தமில்லை. அவர் விரும்பும் கழகத்தில் விளையாடலாம் என்றும் அறிவிக்கப்பட்டது.

எனினும் பார்சிலோனாவில்தான் மெஸ்ஸி தொடர்ந்தும் இருப்பார் என்று கருதப்பட்ட நிலையில், அதன்படியே அடுத்த 5 ஆண்டுகளுக்கு ஒப்பந்தம் நீடிக்கப்பட்டுள்ளது. எனினும் பார்சிலோனா கழகத்தில் நிலவும் கடுமையான நிதி நெருக்கடி காரணமாக மெஸ்ஸியின் கடந்த ஒப்பந்தத் தொகையில் இருந்து 5 சதவீதம் குறைக்கப்பட்டுள்ளது. இதை மெஸ்ஸியும் ஏற்றுக்கொண்டுள்ளார். (ம)




## மரண அறிவித்தல்

தோற்றம்
26 . 03 . 1950



மறைவு
15 . 07 . 2021

### திருமதி இராசேந்திரா இரத்தினேஸ்வரி

மலேசியாவை பிறப்பிடமாகவும் கல்லைவேம்படி சுழிபுரம், வெள்ளவத்தை, கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட **திருமதி இராசேந்திரா இரத்தினேஸ்வரி** அவர்கள் நேற்று (15.07.2021) வியாழக்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற முத்துக்குமாரு - விசாலாட்ச்சி தம்பதியினரின் மூத்த மகளும், காலஞ்சென்ற திரு.திருமதி நடராசா (சங்கரத்தை - வட்டுக்கோட்டை) தம்பதியினரின் மருமகளும் திரு இராசேந்திரா (இளைப்பாறிய தொழில்நுட்ப உதவியாளர், நீர்ப்பாசன திணைக்களம்) அவர்களின் மனைவியும் காலஞ்சென்ற குணசிங்கம், பரமேஸ்வரி ஆகியோரின் சகோதரியும் வைத்தியகலாநிதி சுரேந்திரகுமாரன் (சமுதாய வைத்திய நிபுணர், சிரேஷ்ட விரிவுரையாளர் மருத்துவ பீடம் யாழ் பல்கலைக்கழகம்), செந்தில்குமரன் (மேற்பார்வை உத்தியோகத்தர் - BUILT Company), சுஜாதா, மீரா (பெண்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர், பிரதேச செயலகம் காரைநகர்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் ரேணுகா (நிர்வாக உத்தியோகத்தர் IMS மானிப்பாய்), சுதர்சன் (விக்னேஸ்வராக் கல்லூரி, கரவெட்டி) ஆகியோரின் அன்பு மாமியும் அபிநவன், அப்சரா ஆகியோரின் அன்பு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.07.2021) வெள்ளிக்கிழமை கோம்பயன்மணல் இந்து மயானத்தில் இடம்பெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்
இல. 10A, [illegible]
[illegible] வீதி,
நல்லூர்

வைத்தியர் - இ. சுரேந்திரகுமாரன் - 077 744 8080
சு. மீரா - 077 388 5233

## மரண அறிவித்தல்

தோற்றம்
28 . 12 . 1980



மறைவு
13 . 07 . 2021

### மகேந்திரன் பிரதாபன்

**(டிலா போட்டோ அன் வீடியோ உரிமையாளர்)**

வட்டு மேற்கு வட்டுக்கோட்டையை பிறப்பிடமாகவும் Towerlane பண்டத்தரிப்பை வதிவிடமாகவும் கொண்ட மகேந்திரன் பிரதாபன் ( டிலாபோட்டோ அன் வீடியோ உரிமையாளர்) அவர்கள் கடந்த (13.07.2021) செவ்வாய்க்கிழமை அன்று அகால மரணமடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற மகேந்திரன் - ஆனந்தநாயகி தம்பதிகளின் அன்புப் புதல்வனும் பெரியதம்பனையைச் சேர்ந்த காலஞ்சென்ற பிள்ளைநாயகம் - லூர்த்துமேரி தம்பதிகளின் அன்பு மருமகனும் கமலினியின் அன்புக் கணவரும் டிலக்ஷன், சக்ஷனா ஆகியோரின் பாசமிகு தந்தையும் பிரசாந்தி (சுவீடன்), ஜெகதாபன் (சுவீடன்), றஜிதா (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு சகோதரனும் பிரபாகரன், கஜேந்தினி (சுவீடன்), முகுந்தன் (ஜேர்மனி), கோகிலவதனி, யசோதினி ஆகியோரின் அன்பு மைத்துனரும் வசீகரன், லோகேஸ்வரன் ஆகியோரின் அன்பு சகலனும் டிலானி, சந்தோஷ், சமந்தா ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆரியனின் பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.07.2021) வெள்ளிக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் 10.00 மணியளவில் விளாவெளி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஆனந்தி ( தாய் ) - 077 452 5265
[illegible] ( மனைவி ) - 077 492 0283
ஜெகதாபன் ( ராசா - சகோதரன் ) - 0046 704 570 773
றஜிதா (சகோதரி ) - 0049 172 627 3744

தகவல்
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்

உதிப்பு
10
.
06
.
1937



உதிர்வு
15
.
07
.
2021

### திருமதி டயரத்தினம் யோகம்மா

அல்வாயைப் பிறப்பிடமாகவும் கட்டுடை மானிப்பாயை வதிவிடமாகவும் கொண்ட திருமதி டயரத்தினம் யோகம்மா 15.07.2021 வியாழக்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லையா செல்லம்மா தம்பதியினரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான கார்த்திகேசு செல்லம்மாவின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற டயரத்தினத்தின் அன்பு மனைவியும், பரமேஸ்வரன், காலஞ்சென்ற கணேசலிங்கம் மற்றும் யோகராணி (பிரதம முகாமைத்துவ உத்தியோகத்தர் பிரதேச செயலகம் - சங்கானை), சிவவாணி (சமுர்த்தி முகாமையாளர், பிரதேச செயலகம் - சங்கானை) ஆகியோரின் பாசமிகு தாயாரும், காலஞ்சென்ற கமலநாயகி மற்றும் தயாநிதி, ரவிச்சந்திரன், ஜெகதீஸ்வரன் ஆகியோரின் அன்பு மாமியாரும், கோமதி, ஜீவிதா, தீபிகா, மிதுஷன் தேன்மொழி, கவிதா, வினோஜன், தயிலன், அபினாஷ், அபிஷ்னா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், பவதரன், கிரிசாந், அகிஷா, அபிசயா, அத்மிகன், ஆயிசா ஆகியோரின் அன்புப் பூட்டியும், காலஞ்சென்றவர்களான கனகரத்தினம், இரத்தினம், சுப்பிரமணியம் மற்றும் யோகேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.07.2021)வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று முற்பகல் 10.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

கட்டுடை,
மானிப்பாய்

தகவல்
குடும்பத்தினர்

## குருதிக்கொடை

சாவகச்சேரி, ஜூலை 16

கைதடி நாவற்குழி அ.த.க.பாடசாலையில் இன்றும், கைதடி சரஸ்வதி சனசமூக நிலையத்தில் எதிர்வரும் 25ஆம் திகதியும் குருதிக்கொடை நிகழ்வு நடைபெறவுள்ளது.

யாழ்.மாவட்ட இளைஞர் நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஒன்றியமும் சாவகச்சேரி லயன்ஸ் கழகமும் இணைந்து குருதிக் கொடை நிகழ்வை நடத்தவுள்ளனர். (து-9)

## கடைகள் விற்பனைக்கு

தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை முன்பாக உள்ள காணியில் அமைய உள்ள மூன்று கடைத் தொகுதிகள் விற்பனைக்கு உண்டு.

K.S. அஜித்குமார்
K.S.Y. அம்பாள் கட்டட ஒப்பந்தகாரர்

**077 47 47450**

## வேலையாள்கள் தேவை

**பல்பொருள் வணிகம்** ஒன்றில் **கணக்காளர்** மற்றும் **பொதி செய்வதற்கு பெண்** வேலையாள்கள் தேவை.

**077 353 9992**

ஓம் நமச்சிவாய

## குரு பூஜை



வண்ணார் பண்ணை **அருளம்பல சுவாமிகளின்** குருபூஜை இன்று (16.07.2021) வெள்ளிக்கிழமை கீரிமலையில் சுவாமிகளின் சமாதி ஆலயத்தில் நடைபெறும் நாட்டின் அசாதாரண சூழ்நிலையால் குறித்த குருபூஜை நிகழ்விற்கு அடியார்களை அழைக்க முடியாமையிட்டு மனம் வருந்துகின்றோம்.

**15/2 முதலியார் ஒழுங்கை, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.**

**திருமதி. துஷ்யந்தி சிறீகரன் (சுவாமிகளின் பூட்டி)**

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு
02
.
09
.
1941



இறப்பு
28
.
06
.
2020

### இராசையா பத்மலிங்கம்

(முன்னாள் இலங்கை போக்குவரத்து சபை நடத்துனர்)

ஏழாலை கிழக்கு,
ஏழாலை.

குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்

தோற்றம்
29
.
07
.
1944



மறைவு
12
.
07
.
2021

### திருமதி பத்மநாதன் தவமணிதேவி

கடந்த 15.07.2021 ஆம் திகதி உதயன் பத்திரிகையில் 16 ஆம் பக்கத்தில் பிரசுரமான பத்மநாதன் தவமணிதேவி என்ற மரண அறிவித்தலில் பேரர்களான சஞ்சீவன், பிரதீப் ஆகிய இருவரின் பெயரும் தவறுதலாக விடுபட்டுள்ளது. குறிப்பிட்ட மரண அறிவித்தலில் இணைத்து வாசிக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

**பழனி ஆண்டவர் வீதி,**
**கோண்டாவில் கிழக்கு,**
**கோண்டாவில்.**

**விளம்பரதாரர்**
**பவானந்தன் (குட்டி)**
**077 986 7012**

# VACANCIES
# UNIVERSITY OF JAFFNA SRI LANKA

University of Jaffna will entertain applications from qualified persons for the under mentioned post up to **28.07.2021.**

**Post of Temporary Research Assistants / Temporary Scientific Assistants**
**"Lee Foundation Endowment for Orthopaedic Surgery - Professorial Surgical Unit Faculty of Medicine, University of Jaffna"**

| Post | Salary scale |
|---|---|
| **Temporary Research Assistants** | **Rs.49,860/- (Fixed) pm** |

Qualifications:-

1. Pre intern medical officers :
   Those who have completed the Final MBBS Examination.
   *Selection will be based on the order of Merit list.*
2. Para-Medical or Science based qualified graduates :
   I. A First or Second Class (Upper Division) in a Special Degree Examination in the relevant field.
   OR
   II. A Second class ( Lower Division) in a Special Degree Examination in the relevant field.
   OR
   III. An ordinary pass in the B.Sc Special Degree Examination in the relevant field.

**AND**

The graduates those who have an excellent track record on under undergraduate research, publications, IT skills, statistical analysis skills, and English Language skills.

| Post | Salary scale |
|---|---|
| **Temporary Scientific Assistants** | **Rs.48,385 / - (fixed) pm** |

Qualifications:-

1. Para-Medical or Science based qualified graduates :
   I. A First or Second Class (Upper Division) in a Special Degree Examination in the relevant field.
   OR
   II. A Second Class ( Lower Division) in a Special Degree Examination in the relevant field.
   OR
   III. An ordinary pass in the B.Sc Special Degree Examination in the relevant field.
   OR
   IV. An ordinary pass in the B.Sc General Degree Examination with a recognized postgraduate qualification in the relevant field.

**Note:** Having an excellent track record on undergraduate research, publications, IT skills, statistical analysis skills, and English Language skills will be given priority.

Perfected applications shall be sent to the **Senior Assistant Registrar / Faculty of Medicine, University of Jaffna, Adiyapatham Road, Kokuvil, Jaffna.**

Application forms will be available in the University website http://www.med.jfn.ac.lk/wp-content/uploads/2021/01/APPLICATION-Form.pdf. Those who wish to send the application forms downloaded from the University website should accompany with the paid Bank Slip for the deposit of a sum of Rs. 100/- credited to the Peoples Bank Account No: **162-1-001-6-0000880**(*Ref number should be mentioned:* 970000090000387) of Bursar, University of Jaffna.

Application forms and other details may be obtained from the office of the Senior Assistant Registrar / Faculty of Medicine, University of Jaffna, Sri Lanka, on a payment of Rs. 100 / - per application form. Those who wish to obtain application forms by post are requested to send a self - addressed stamped envelope 23x10 cm in size along with the paid Bank Slip to the above address. The post applied for should be marked on the top left hand corner of the envelope.

Applicants from the University System/Government Departments/Corporations and Statutory Board should channel their applications through the Head of respective Institutions, but may send an advance copy in the first instance. However, no such applicant will be considered for interview, if the application channeled through the Head of the Department is not received.

Illegible & incomplete applications, and applications received by the University after the closing date will be rejected *without intimation*. Only short-listed applicants will be called for an interview.

**REGISTRAR**
**UNIVERSITY OF JAFFNA**
**SRI LANKA**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொது அறிவு



1) வரலாற்றின் தந்தை?
ஹெரடோடஸ்

2) புவியலின் தந்தை?
தாலமி

3) இயற்பியலின் தந்தை?
நியூட்டன்

4) வேதியியலின் தந்தை?
இராபர்ட் பாயில்

5) கணிப்பொறியின் தந்தை?
சார்லஸ் பேபேஜ்

6) தாவரவியலின் தந்தை?
தியோபிராஸ்டஸ்

7) விலங்கியலின் தந்தை?
- அரிஸ்டாட்டில்

8) சமூகவியலின் தந்தை?
அகஸ்டஸ் காம்தே

9) அரசியல் அறிவியலின் தந்தை?
அரிஸ்டாட்டில்

10) அரசியல் தத்துவத்தின் தந்தை?
பிளேட்டோ

# தந்திர நரி




ஒரு அடர்ந்த காட்டில் சிங்கம் ஒன்று பசியின் காரணமாக தனியாக மானைத் துரத்துகிறது. சிங்கத்திடம் மாட்டிக்கொள்ளாமல் மான் எப்படியோ தன்னை காப்பாற்றிக்கொண்டது. சிங்கம் ஏமாற்றத்துடன் திரும்பியது. ஓடும்போது மானுக்கு பல இடங்களில் காயம் பட்டு ஒரு இடத்தில் விழுந்தது.

இதை பார்த்த நரி ஒன்று இதை எப்படியாவது உண்ண வேண்டும் என்று எண்ணியது. தன் தந்திரத்தால் மானிடம் சிறிது தொலைவில் இருந்து பேச்சு கொடுத்தது. மானை எப்படியாவது நம்ப வைத்து உண்ண வேண்டும் என்ற ஒரே குறிக்கோளுடன் களமிறங்கியது.

தொலைவில் இருந்தே உடல்நிலை சரியில்லையா! என்று இதேபோன்று அன்பாக பேசிக்கொண்டே சிறிது சிறிதாக அருகில் சென்றது. மானும் உதவி தான் செய்கிறது என்று எண்ணி நம்பிவிட்டது.

நரி மகிழ்ச்சியுடன் அருகில் சென்றது. மான் தனக்கு உதவி செய், என்னை தூக்கிவிடு என்று கூறும்போதே நரி அதன் தொண்டை பகுதியை கடித்து மான் இறந்து போனது. தன் பசியைத் தீர்த்துக்கொண்டது நரி. அர வணைப்பது போல அன்பாக பேசி தன் எண்ணங்களை நிறை வேற்றிக் கொண்டது.

**"தீய குணமுடையவர் அன்பின் மிகுதியினால் விழுங்குபவர் போல் பார்த்தாலும் அவருடைய நட்பு வளர்வதை விடக் குறைவது நல்லது".**

## யானை



யானை பாரு யானை பாரு
ஆடி அசைஞ்சு வருது பாரு!
கறுப்பு யானை கம்பீரமா
நாட்டை நோட்டம் விடுது பாரு!

தூணைப் போலக் காலைப் பாரு
நீண்ட தும்பிக் கையைப் பாரு!
முறத்தைப் போலக் காதைப் பாரு
விசிறி வீசும் அழகைப் பாரு!

மலையைப் போல உடம்பைப் பாரு
கடுகைப் போலக் கண்ணைப் பாரு!
குட்டிக் குட்டி வாலைப் பாரு
குனிய வச்சு ஏறிப் பாரு!

நீரை உறிஞ்சிக் குளிக்கும் பாரு
பூவாய்ச் சொரிந்து களிக்கும் பாரு!
வாழைப் பழத்தைக் கொடுத்துப் பாரு
வாகாய் உள்ளே தள்ளும் பாரு!

கழுத்தில் மணியைக் கட்டிப் பாரு
காத தூரம் கேட்கும் பாரு!
பிள்ளை யாரு முகத்தைப் பாரு
உள்ளம் துள்ளிக் குதிக்கும் பாரு!

யானையோட பலத்தைப் பாரு
தும்பிக் கையில் இருக்கு பாரு!
நீயும் கொஞ்சம் உள்ளே பாரு
நம்பிக் கையில் தெரியும் பாரு!!




# கோள்கள்



கோள் (planet) விண்மீனைச் சுற்றிவரும் வான்பொரு ளாகும். கோள் எனும் சொல் வரலாறு, கணியவியல், அறிவியல், தொன்மவியல், சமயம் சார்ந்த பண்டைய சொல்லாகும். சூரியக் குடும்பத்தில் உள்ள பல கோள் களை வெற்றுக் கண்ணால் பார்க்கலாம். இவை பல பண்டைய நாகரிகங்களால் தெய்வீகத் தன்மையோடும் தெய்வங்களால் அனுப்பப்பட்டவையாகவும் உணரப்பட் டன. அறிவியல் அறிவு வளர்ந்தும், கோள்கள் பற்றிய கண்ணோட்டம் மாறலானது.

கோள்கள் புவியைச் சுற்றி வேறுபட்ட புறவட்டிப்பு இயக் கங்களில் உள்ளன எனத் தாலமி கருதியுள்ளார். பல முறை சூரிய மையக் கருதுகோள் பரிந்துரைக்கப்பட்டு வந்திருந்தாலும், நோக்கீட்டு வானியல்வழியாகத் தொலைநோக்கி கொண்டு கலீலியோவால் நிறுவப்பட்ட 17 ஆம் நூற்றாண்டுவரை அது ஏற்கப்படவில்லை. சூரியக் குடும்பத்தில் எட்டு கோள்கள் உண்டு. சூரியனில் இருந்து தொலைவு கூடகூட முதலில் புவிநிகர் கோள்க ளான புதன், வெள்ளி, புவி, செவ்வாய் ஆகியவை அமை கின்றன. அடுத்து பெருங்கோள்களான வியாழன், சனி, யுரேனஸ், நெப்டியூன் ஆகியவை அமைகின்றன. முதல் 2 கோள்களில் நிலா ஏதும் இல்லை. ஆறுகோள்களில் ஒன்று அல்லது அதற்கும் மேற்பட்ட நிலாக்கள் உண்டு.

## எண்களை இணைத்து படம் வரைவோம்




# 31ஆம் நாள் நினைவஞ்சலி

அமரர்
கிருஷ்ணபிள்ளை
செல்வராசா
( நாச்சிமார் கோயிலடி )



தோற்றம் 20.10.1948
மறைவு 15.06.2021

அமைதியின் வடிவாய் அன்பின்
- ஊற்றாய்,
அமைதியாக ஆண்டவன் அடி
- தேடினீரே
அழுகின்ற உறவுகள்
- தேற்றுவாரின்றி

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி !!!

நினைவுகளுடன்
குடும்பத்தினர்
021 221 6201


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலியான கஜானாவே பஸிலுக்கு கிடைத்தது

## திறைசேரியை நிரப்ப வேண்டிய பொறுப்பு அவருக்குள்ளது என்கிறார் ஆளுங்கட்சி எம்.பி.

**கொழும்பு, ஜூலை 16**

**திறைசேரி வெறுமையான நிலையிலேயே பஸில் ராஜபக்ச நிதி அமைச்சு பதவியை பொறுப்பேற்றார். எனவே, திறைசேரியை நிறைப்பதற்கான கடப்பாடு அவருக்கு உள்ளது. அதற்கான நடவடிக்கையில் தற்போது இறங்கியுள்ளார் என்று ஆளுங்கட்சி நாடாளுமன்ற உறுப்பினரான ஜகத் குமார தெரிவித்தார்.**

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன வின் ஊடகவியலாளர் மாநாடு நேற்று நடைபெற்றது. இதில் கலந்துகொண்டு கருத்து வெளியிடுகையில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

"திறைசேரி வெறுமையடைந்திருந்த சூழ்நிலையிலேயே பஸில் ராஜபக்சவுக்கு அமைச்சு பதவியை ஏற்க வேண்டிய நிலை ஏற்பட்டது. எனவே திறைசேரியை நிரப்புவதற்கான பொறுப்பு அவருக்கு உள்ளது. திறைசேரி நிரம்ப வேண்டுமென்றால் பொருளாதாரம் இயங்குநிலையில் இருக்க வேண்டும்.

இதற்கான திட்டத்தை செயற்படுத்த பொருளாதார நிபுணர்கள் உட்பட சகல தரப்புகளுடனும் பஸில் ராஜபக்ச தற்போது பேச்சு நடத்திவருகின்றார்.

அதேபோல வெளிநாடுகளுக்கு கடன் செலுத்த வேண்டியுள்ளது. மக்களின் வாழ்க்கைச்செலவு அதிகரித்துள்ளது. எரிபொருள்களின் விலையும் அதிகரித்துள்ளது. எனவே, மக்களுக்கு நிவாரணம் வழங்கப்படவேண்டும்.

பொருள்களின் விலை குறைய வேண்டும். பஸிலின் வருகையோடு இவை நடக்கும் என நம்புகின்றோம்.

பஸில் ராஜபக்சவுக்கு அனுபவம் இருக்கின்றது. போர் உட்பட நெருக்கடியான காலங்களில் பொருளாதாரத்தை சிறந்த வகையில் முகாமை செய்தவர்." என்றார். (கு-44)



# சித்தன்கேணி வாள்வெட்டு சந்தேக நபர்கள் மறியலில்

யாழ்ப்பாணம், ஜூலை 16

சித்தன்கேணியில் உள்ள கோவில் பகுதியில் கடந்த சில தினங்களுக்கு முன்னர் இடம்பெற்ற வாள்வெட்டுச் சம்பவத்தின் சந்தேகநபர்கள் இருவரும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

சந்தேக நபர்கள் வட்டுக்கோட்டை பொலிஸில் நேற்று சரணடைந்ததை அடுத்து அவர்கள் மல்லாகம் நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டனர்.

இதையடுத்து சந்தேக் நபர்களின் தரப்பில் முன்னிலையாகிய சட்டத்தரணிகள் பிணை விண்ணப்பம் கேட்டிருந்தனர். எனினும் நீதிமன்றம் அவர்களை விளக்கமறியலில் வைத்தது. (ம-26)



# 700 குடும்பங்களுக்கு உணவுப் பொதிகள்

யாழ்ப்பாணம், ஜூலை 16

கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்ட 700 குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொதிகள் கரித்தாஸ் கியூடெக் யாழ்ப்பாணம் நிறுவ னத்தால் அண்மையில் வழங்கப்பட்டன.

இதில் சங்கானை, கோப்பாய் மற்றும் கரவெட்டி ஆகிய பகுதிகளைச் சேர்ந்த குடும்பங்க்ளுக்கு 300 பொதிகள் வழங்கப்பட்டன. அதேவேளை யாழ். மறைமாவட்ட பங்குத்தந்தையர்கள் ஊடாக அரியாலை, மணியந்தோட்டம், நல்லூர், நாவாந்துறை, நவாலி, பண்டத்தரிப்பு, புங்குடுதீவு ஆகிய இடங்களைச் சேர்ந்த 400 குடும்பங்களுக்கு உணவுப் பொதிகள் வழங்கப்பட்டன. (ஐ)



# 1,447 தொற்றாளர்கள் நேற்று அடையாளம்!

கொழும்பு, ஜூலை 16

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்ட மேலும் ஆயிரத்து 447 பேர் நேற்று அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவு தெரிவித்துள்ளது.

இதற்கமைய நாட்டில் கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 2 இலட்சத்து 80 ஆயிரத்து 506ஆக அதிகரித்துள்ளடன், கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்ட மேலும் 939 பேர் நேற்று குணமடைந்து வீடு திரும்பினர்.

அதன்படி, நாட்டில் கொரோனாத் தொற்றிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 2 இலட்சத்து 53 ஆயிரத்து 953ஆக உயர்வடைந்துள்ளது. இதேவேளை, கொரோனாத் தொற்று காரணமாக வைத்தியசாலைகள் மற்றும் தனிமைப்படுத்தல் மையங்கள் என்பவற்றில் 22 ஆயிரத்து 892 பேர் சிகிச்சை பெற்று வருகின்றனர். (ம-22)

# சுற்றுலாத்தளங்கள் மீண்டும் திறப்பு

கொழும்பு, ஜூலை 16

வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளுக்காக, பல சுற்றுலாத் தளங்கள் மீண்டும் திறக்கப்பட்டுள்ளன என்று இலங்கை சுற்றுலா மேம்பாட்டு ஆணையகம் தெரிவித்துள்ளது. அதற்கமைவாக தலதா மாளிகை, பேராதெனிய தாவரவியல் பூங்கா, யால தேசிய பூங்கா, பின்னவல யானைகள் சரணாலயம் , ரிதியகம சபாரி பார்க், ஓட்டன் சமவெளி தேசிய வனம், மின்னேரியா தேசிய பூங்கா, மற்றும் சிங்கராஜ வனப் பகுதி ஆகியவை திறக்கப்பட்டுள்ளன.

கொரோனாத் தடுப்பூசியின் இரண்டு டோஸ்களையும் பெற்றுக்கொண்டுள்ள வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள், இலங்கைக்கு சுற்றுலா மேற்கொள்ள நிபந்தனைகளுடன் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, நாட்டுக்குள் வந்த பின்னர் முதலாவது தினத்தில் மேற்கொள்ளப்படும் பி.சி.ஆர் பரிசோதனையில் தொற்று உறுதியாகவில்லையாயின், அவர்கள் இலங்கையின் எந்த பாகத்துக்கும் சுற்றுலா செல்ல அனுமதி வழங்கப்படும் என்று சுற்றுலா அதிகார சபை தெரிவித்துள்ளது.

எனினும் சுற்றுலா மேற்கொண்டுள்ள 7 ஆவது நாள், சுகாதார அமைச்சால் அங்கீகரிக்கப்பட்ட பரிசோதனை நிலையத்தில் அவர்கள் மீண்டும் பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ள வேண்டும் என்றும் தெரிவித்துள்ளது. (ஒ.4)

# மருந்துகளுக்கு தட்டுப்பாடு பெரும் நெருக்கடியில் நாடு

## ஆபத்தை சுட்டிக்காட்டினார் ராஜித

கொழும்பு, ஜூலை 16

நாட்டின் தனியார்துறை சந்தைகளில் கூட தைரொட்சின், புற்றுநோய் மருந்து உள்ளிட்ட அத்தியாவசியமான மருந்துப் பொருள்களுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

இது போன்றதொரு நெருக்கடி நிலை முன்னெப்போதும் ஏற்பட்டதில்லை என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

அதுமாத்திரமன்றி நல்லாட்சி அரசின் ஆட்சிக்காலத்தில் மருந்துப்பொருள்களுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டதில்லை என்றும், அவ்வாறு ஏற்படும் பட்சத்தில் உடனடியாக அதற்குரிய தீர்வு பெற்றுக்கொடுக்கப்பட்டது என்றும் அவர் குறிப்பிட்டார்.

கொழும்பிலுள்ள ஐக்கிய மக்கள் சக்தியின் தலைமைக் காரியாலயத்தில் நேற்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

'நல்லாட்சி அரசின் ஆட்சிக்காலத்தில் புதியதொரு மென்பொருளின் உதவியுடன் மருந்துப்பொருள்களின் கையிருப்பு தொடர்பான தகவல்கள் உரியவாறு பேணப்பட்டன. அதன்காரணமாக எமது ஆட்சிக்காலத்தில் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் மருந்துப்பொருள்களுக்குத் தட்டுப்பாடு ஏற்படவில்லை.

அதனையும் மீறி மருந்துப் பொருள்களுக்குப் பற்றாக்குறை ஏற்படும் பட்சத்தில், அப்பிரச்சினை இரு நாள்களுக்குள் நிவர்த்தி செய்யப்பட்டது என்றார். (ம22)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### வடக்கில்....

இவர்களுடன் சேர்த்து 19 பேர் இதுவரை டெல்டாவுடன் கண்டறியப்பட்டுள்ளனர் என்று சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் மருத்துவர் ஹேமந்த ஹேரத் தெரிவித்தார்.

வடக்கு மாகாணத்தில் சந்தேகத்துக்கிடமான அறிகுறிகள் தென்படுவோர் மற்றும் இளவயதினர் அதிகம் தொற்றுக்கு உள்ளாகும் பிரதேசங்கள் என்பன அடையாளப்படுத்தப்பட்டு அங்கு பெற்றுக் கொள்ளப்படும் பி.சி.ஆர். மாதிரிகளில் தொற்றுக்கு உள்ளாவோரின் மாதிரிகள் எழுமாற்றாக கொழும்பு சிறிஜெயவர்தனபுர பல்கலைக் கழகத்துக்கு அனுப்பி வைக்கப்படுகின்றன.

இவ்வாறு அனுப்பிவைக்கப்பட்ட மாதிரிகளிலிருந்தே டெல்டா வைரஸுடன் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

தொற்றாளர்கள் யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களைச் சேர்ந்தவர்கள் என்று தெரிவிக்கப்பட்டபோதும் அவர்கள் எந்த சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவைச் சேர்ந்தவர்கள் என்ற விவரங்களை வெளியிட பிரதிப் பணிப்பாளர் மருத்துவர் ஹேமந்த ஹேரத் மறுத்தார்.

இதேவேளை வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த இருவரைத் தவிர 17 பேர் டெல்டா வைரஸுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர். அவர்களில் 14 பேர் கொழும்பு மாநகர சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவைச் சேர்ந்தவர்கள். இருவர் பிலியந்தலையைச் சேர்ந்தவர்கள். மற்றொருவர் கடற்படைச் சிப்பாய்.

'நாட்டின் பல்வேறு மாவட்டங்களிலும் டெல்டா வைரஸ் தொற்றுடன் நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

தடுப்பூசி ஏற்றியவர்களும் சரி, ஏற்றாதவர்களும் சரி சுகாதார நடைமுறைகளை இறுக்கமாகப் பின்பற்ற வேண்டும்' என்று சிறிஜெயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் மருத்துவ நிபுணர் சந்திம ஜீவந்தர தெரிவித்தார்.

(ம-ஒ,5,22)

### கொழும்பு...

களில் 'டெல்டா' வைரஸ் தொற்றுடன் மேலும் 14 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று கொழும்பு மாநகர சபையின் தலைமை மருத்துவ அதிகாரி ருவன் விஜயமுனி குறிப்பிட்டுள்ளார்.

உருமாறிய கொரோனா வைரஸ் வகைகள் பரவுவது கொழும்பு மாநகரிலும் அதனை அண்மித்த பகுதிகளிலும் தீவிரமடைந்துள்ளன என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

உருமாறிய டெல்டா தொற்றுடன் அடையாளம் காணப்பட்டவர்கள் சிகிச்சை நிலையங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர் என்றும் மருத்துவ அதிகாரி ருவன் விஜயமுனி குறிப்பிட் டுள்ளார்.

டெல்டா தொற்றுடன் அடையாளம் காணப்பட்டவர்களின் பரிசோதனை முடிவுகள் சுகாதார அமைச்சுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன என்றும், உருமாறிய வைரஸ்கள் தொடர்பாக சுகாதார அமைச்சு மேலதிக ஆய்வுகளை மேற்கொள்கின்றது என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ம-22)

### வல்வெட்டித்துறையில்...

ளது.

இதன்மூலம் வல்வெட்டித்துறை ஆதிகோவிலடி மற்றும் அதனை அண்டிய பகுதிகளில் மூன்று நாள்களில் 88 பேருக்கு கொவிட்19 நோய்த் தொற்று உள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. (ம-26)

### தமிழர்களின்...

இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் அலெய்னா பி.டெப்லிட்ஸ் தலைமையிலான குழுவினருக்கும் இரா.சம்பந்தன் தலைமையிலான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருக்கும் இடையிலான முக்கிய சந்திப்பு நேற்று நடைபெற்றது.

கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனின் கொழும்பு இல்லத்தில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றது.

இந்தச் சந்திப்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் அதன் தலைவர் இரா.சம்பந்தன், நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ.சுமந்திரன், செல்வம் அடைக்கலநாதன் ஆகியோருடன் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசாவும் பங்கேற்றிருந்தார்.

சந்திப்பு குறித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் தெரிவித்ததாவது:

இந்தச் சந்திப்பில் தற்போதைய அரசின் செயற்பாடுகள் மற்றும் அரசியல் தீர்வு விடயங்களில் முன்னெடுக்கப்படும் நகர்வுகள் குறித்தே முக்கியத்துவம் கொடுத்து பேசப்பட்டது. தமிழ் மக்களின் அரசியல் தீர்வு விடயத்தில் ஆட்சிக்கு வருகின்ற சகல அரசும் தீர்வுகளை பெற்றுக்கொடுப்பதாக வாக்குறுதிகளை வழங்கி வருகின்றனர்.

தற்போது புதிய அரசு ஆட்சியில் உள்ள நிலையில் தமிழ் மக்களின் தீர்வு விடயங்களில் வாக்குறுதிகள் வழங்கப்பட்டுள்ள போதிலும் அவற்றை நிறைவேற்றும் எந்தவொரு முன்னேற்றகரமான செயற்பாடுகளையும் முன்னெடுப்ப தாகத் தெரியவில்லை. அமெரிக்கா இந்த விடயங்களில் இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும் எனவும் வலியுறுத்தினோம்.

தமிழர் பிரச்சினைகள் தொடர்பில் ஐக்கிய அமெரிக்கா கடந்த 2012ஆம் ஆண்டு தொடக்கம் காத்திரமான பங்களிப்பைச் செய்து வருகின்றது. அதனைத் தொடர்ந்தும் முன்னெடுக்க வேண்டும். அதற்கு நன்றியுடையவர்களாக நாம் இருப்போம். அதேபோல் தமிழ் மக்களின் அரசியல் தீர்வு விடயத்தில் அமெரிக்கா அழுத்தம் கொடுக்க வேண்டும் எனவும் நாம் கோரிக்கை விடுத்தோம்.

மேலும், ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவுடன் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடனான சந்திப்பு குறித்தும் அமெரிக்கத் தூதுவர் கேட்டறிந்துகொண்டார். இறுதி நேரத்தில் ஜனாதிபதியுடனான பேச்சு இரத்தானது குறித்தும், அதில் நாம் பேசவிருந்த முக்கிய விடயங்கள் குறித்தும் தெளிவுபடுத்தினோம்.

தொடர்ச்சியாக எமது மக்கள் வடக்கு, கிழக்கில் நெருக்கடிகளுக்கு முகங்கொடுத்து வருகின்ற நிலையில் அவற்றுக்கான உடனடித் தீர்வுகள் பெற்றுக்கொடுக்கப்பட வேண்டும் என்றும் கோரினோம். காணி விடுவிப்பு, அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் மற்றும் அரசியல் அமைப்பு ரீதியிலான எமக்கான அங்கீகாரம் குறித்து பேசினோம்.

தமிழ் மக்களின் அரசியல் தீர்வு விடயங்களில் இலங்கை அரசு பல்வேறு வேலைத்திட்டங்களை முன்னெடுக்கும் என்ற வாக்குறுதிகளை எமக்கும் கொடுத்துள்ளனர்.

இந்த பொறிமுறைகளை முன்னெடுப்பதில் அமெரிக்கா தொடர்ந்தும் அரசை வலியுறுத்தும் என்று தூதுவர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரிடம் தெரிவித்தார், என்றனர். (ம-ஒ,22)

### 16 லட்சம்...

இலங்கையில் தடுப்பூசி ஏற்றும் பணிகளை தீவிரப்படுத்தும் நோக்கில் இந்தத் தடுப்பூசிகள் வழங்கப்படுகின்றன.

சீனா சிக்கலில் இருந்தபோது இலங்கையில் இருந்து கிடைத்த ஆதரவை நாங்கள் எப்போதும் நினைவில் கொள்கின்றோம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

### அரசினுடைய...

கேட்டுள்ளது ஐக்கிய தேசியக் கட்சி.

இங்கிலாந்தின் மனித உரிமை விவகாரங்களில் கவலைகளை எழுப்பும் சீனாவின் அறிக்கையில் இலங்கை அரசு கையெழுத்திட்டதைக் கண்டித்து ஐக்கிய தேசியக் கட்சி அறிக்கை வெளியிட்டுள்ளது. அதிலே மேற்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் உள்ளதாவது:

இலங்கையில் 6 லட்சம் மக்கள் அஸ்ராஜெனேகா தடுப்பூசியின் இரண்டாவது டோஸுக்காகக் காத்திருக்கின்றனர். அரசாங்கத்தின் இந்த நடவடிக்கைகளால் மக்களுக்கு அரசரமாகத் தேவைப்படும் தடுப்பூசிகளைத் தராது நிறுத்திவிட வேண்டாம் - என்றுள்ளது. (ம)

### பருத்தித்துறையில்...

யும். பருத்தித்துறை நகரில் இருந்த பேருந்து தரப்பிடம் மூடப்பட்டுள்ளதால் டிப்போ சந்தியிலிருந்து பேருந்துகள் சேவையில் ஈடுபடும். இந்தக் கட்டுப்பாடுகள் உடன் நடைமுறைக்கு வரும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

பருத்தித்துறை சந்தை வியாபாரிகள் மூவருக்கு தொற்று உள்ளமை நேற்று அன்டிஜன் பரிசோதனையில் தெரிய வந்தது. அதனையடுத்து சந்தை முடக்கப்பட்டது.

பருத்தித்துறை பெருநகர், ஜே/401 கிராம அலுவலகர் பகுதிகளில் கட்டுப்பாடுகள் போடப்பட்டுள்ளன. பருத்தித்துறை 3ஆம் குறுக்குத் தெரு, தும்பளை வீதி, பத்திரகாளி வீதி, வீ.எம் வீதி, கடற்கரை வீதி, கொட்டடி வீதி அனைத்திலிருந்தும் நகருக்குள் உள்நுழையத் தடை விதிக்கப்பட்டுள்ளது. (ம-26)

### முடக்கப்பட்டது....

ருக்கும் வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளருக்கும் நேற்றுமுன்தினம் இரவு முன்வைக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைய ஆதிகோவிலடிப் பகுதி உடனடியாகத் தனிமைப்படுத்தப்பட்டுள்ளது.

வல்வெட்டித்துறை வடமேற்கு (ஜே388) கிராம அலுவலகர் பிரிவே இவ்வாறு முடக்கப்பட்டுள்ளது. அந்தக் கிராமத்தில் 310 குடும்பங்களைச் சேர்ந்த 940 பேர் வசிக்கின்றனர்.

இதேவேளை, பருத்தித்துறை முதலாம், இரண்டாம் மற்றும் மூன்றாம் குறுக்குத் தெருக்களிலும் சில பகுதிகள் முடக்கப்பட்டுள்ளன. (ம-26)

### சந்தை...

ளமை உறுதிப்படுத்தப்பட்டது.

இந்த ஐந்து பேரில் மூவர் சந்தை வியாபாரிகள். இருவர் சந்தை மேற்குப் பகுதியைச் சேர்ந்தவர்கள். பருத்தித்துறையில் ஏற்கனவே பல இடங்களில் சமூகத்தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ள நிலையில் மேலும் அங்கு அன்டிஜன் மற்றும் பி.சி.ஆர் சோதனைகளை முன்னெடுக்க சுகாதாரத்துறை நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது. (ம-20,26)

### கொரோனாவால்...

அவர்கள் இருவரும் சுழிபுரத்தைச் சேர்ந்தவர்கள்.

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவந்த 33 வயதுடைய ஆண் ஒருவர் நேற்று அதிகாலை ஒரு மணிக்கு உயிரிழந்துள்ளார்.

அத்துடன் நேற்று இரவு 8 மணிக்கு 72 வயதுடைய பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார். (ம-26)

### மேலும்...

என்று அரச தகவல் திணைக்களம் உறுதிப்படுத்தியுள்ளது.

இவ்வாறு உயிரிழந்தவர்களில் 29 ஆண்களும், 21 பெண்களும் அடங்குக்கின்றனர் என்று அரச தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது. இவர்களில் 8 ஆண்களும், 4 பெண்களும் 30 - 50 வயதுகளுக்கு இடைப்பட்டவர்கள். 21 ஆண்களும், 17 பெண்களும் 60 வயதுக்கு மேற்பட்டவர்கள்.

இதற்கமைய நாட்டில் பதிவான கொரோனா மரணங்களின் மொத்த எண்ணிக்கை 3 ஆயிரத்து 661ஆக அதிகரித்துள்ளது. (ம-22)

### வடக்கில்...

தப்பட்டது.

முல்லைத்தீவு சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 4 பேரும், யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் 6 பேரும், பலாலி வான்படையில் ஒருவரும், மன்னார் மாவட்ட மருத்துவமனையில் இருவரும், பூந்தோட்டம் இடைத்தங்கல் முகாமில் ஒருவரும், பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் இருவரும், வவுனியா மாவட்ட மருத்துவமனையில் ஒருவரும், சண்டிலிப்பாய் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 3 பேரும், உடுவில் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் ஒருவரும், பருத்தித்துறை சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 40 பேரும், வேலணை சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 2 பேரும், பிறிதொருவரும் தொற்றாளர்களாக அடையாளப்படுத்தப்பட்டனர். (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய அணிக்குள்ளும் ஊடுருவியது கொரோனா



லண்டன், ஜூலை 16

**இங்கிலாந்தில் முகாமிட்டுள்ள இந்திய அணி வீரர்களில் இருவருக்குக் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என்றும் அவர்களில் ஒருவர் ரிசப் பன்ட் என்றும் முதல்கட்டத் தகவல் வெளிவந்துள்ளது.**



இந்திய டெஸ்ட் கிரிக்கெட் அணி 23 வீரர்களுடன் இங்கிலாந்து சென்றுள்ளது. நியூசிலாந்துக்கு எதிராக ஐ.சி.சி சம்பியன்ஷிப் இறுதி ஆட்டத்தில் விளையாடிய நிலையில், இங்கிலாந்துடன் ஐந்து ஆட்டங்கள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாட இருக்கிறது. இங்கிலாந்துக்கு எதிரான முதல் டெஸ்ட் ஆட்டம் அடுத்த மாதம் 4ஆம் திகதி ஆரம்பமாகின்றது.

ஐ.சி.சி. டெஸ்ட் சம்பியன்ஷிப் இறுதி ஆட்டத்துக்கும் இங்கிலாந்துத் தொடருக்கும் இடையில் 40 நாள்கள் இடைவெளி இருந்தமையால் இந்திய வீரர்கள் தனிமைப்படுத்தல் பொறிமுறைகளில் இருந்து விடுவிக் கப்பட்டனர். இதனால் அவர்கள் பார்வையாளர்களாக யூரோ, விம்பிள்டன் உள்ளிட்ட தொடர்களுக்குச் சென்று வந்துள்ளனர். விரைவில் இந்திய அணியினர் பயிற்சிகளை ஆரம்பிக்கவுள்ள நிலையில், இந்திய அணியினருக்கு நேற்று முன்தினம் கொரோனா சோதனை நடத்தப்பட்டது.

இதன்போது இருவருக்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. எனினும் வீரர்களின் பெயர் விவரங்கள் வெளியிடப்படவில்லை. அந்த இரு வீரர்களில் ஒருவர் இந்திய அணியின் இலக்குக் காப்பாளர் பன்ட் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

## PHYSICS (P.P)

Rosa விளக்கவுரை அலகுகளாக

English / Tamil வீடுவரல்

இளந்திரையன் ISA 074 099 9980

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் ஆறுகால் மடத்தில் 1ம் ஒழுங்கையில் 6 பரப்புக் காணி விற்பனைக்கு. 2 பரப்பாக பிரித்து கொடுக்கப்படும். 1 பரப்பின் விலை 5 இலட்சம் மட்டும். (யாழ் மானிப்பாய் பிரதான வீதியில் இருந்து 100 m தூரம்) தொடர்புகொள்ளும் நேரம் 9.30 AM - 17.00 PM

தொடர்பு: 076-221 2037

076-734 1023

077-064 2661

## English Classes

தனி மற்றும் குழுவாக

Gr. 1 to O/L

Grammar with Syllabus

வீடு வந்து கற்பிக்கப்படும்

077 331 4608

## மின்னிணைப்பாளர் தேவை

மின்னிணைப்பில் ஓரளவு அனுபவம் உள்ளவர்கள் தேவை. தொடர்புகொள்ளவேண்டிய தொலைபேசி எண்

077 723 8292

## வீட்டுப் பணிப்பெண் தேவை

கோண்டாவில் மேற்குப் பகுதியில் வீட்டு வேலை செய்வதற்கு வீட்டுப் பணிப் பெண் தேவை. நாளாந்த சம்பளம் ரூ 800 தொடக்கம் 850 வரை (பேசித் தீர்மானிக்கப்படும்)

தொடர்பு 074 037 2719

## உடனடி வேலைவாய்ப்பு

யாழ் நகரில் இயங்கும் சன்ரைஸ் மெடி கிளினிக்கின் விரிவாக்கத்திற்கு பின்வரும் பதவி வெற்றிடங்களுக்கு ஆட்கள் தேவை.

01. Nursing Assistant
02. Clinic Manager (கிளினிக் மேற்பார்வையாளர்)
03. Electrical & Plumping Technecian
04. Ambulance Driver. (Day Shift/Night Shift)
05. சுத்திகரிப்பாளர்

(17.07.2021) சனிக்கிழமை காலை 10.30 மணிக்கு நேர்முகத்தேர்வு நடைபெறும்.

இடம் : சன்ரைஸ் மெடி கிளினிக் ( யாழ் பஸ் நிலையம் முன் )

தொடர்புகளுக்கு : 021 222 6069

021 222 8013



# டோக்கியோ ஒலிம்பிக்: கொரோனா ஊடுருவல்

டோக்கியோ, ஜூலை 16

ஜப்பானின் தலைநகர் டோக்கியோவில் ஒலிம்பிக் தொடர் ஆரம்பிப்பதற்கு இன்னும் ஒரு வாரமே உள்ள நிலையில், கொரோனாத் தொற்றால் ஒலிம்பிக் தொடர் பாதிக்கப்பட வாய்ப்புக்கள் அதிகம் உள்ளன என்று கருதப்படுகின்றது.

ஜப்பானில் கடந்த வருடம் டோக்கியோ ஒலிம்பிக் தொடர் நடைபெற இருந்தது. எனினும் கொரோனாத் தொற்றால் தொடர் கைவிடப்பட்டு இந்த வருடம் எதிர்வரும் 23ஆம் திகதி இடம்பெறவுள்ளது. கொரோனாவால் இந்த வருடமும் தொடர் பாதிக்கப்படலாம் என்ற எச்சரிக்கைகள் தொடர்ந்தும் இருந்துகொண்டே உள்ளன. இந்த நிலையில் ஜப்பானில் அண்மைய நாள்களாக மீண்டும் கொரோனாத் தொற்று உச்சம்பெற ஆரம்பித்துள்ளது. இதனால் டோக்கியோ நகர பிதாவுடன் ஒலிம்பிக் சம்மேளனத்தில் தலைவர் தோமஸ் பெச் பேச்சு நடத்தவுள்ளார்.

முன்னதாக ஜப்பான் பிரதமரையும் பெச் சந்தித்துப் பேச்சு நடத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம)

டோக்கியோ ஒலிம்பிக்

# உணவு பரிமாறுபவர்களுக்கு கொரோனா தொற்று உறுதி

டோக்கியோ, ஜூலை 16

ஜப்பானின் தலைநகர் டோக்கியோவில் இன்னும் ஒரு வாரத்தில் ஒலிம்பிக் தொடர் ஆரம்பமாகவுள்ள நிலையில், பிரேசில் ஒலிம்பிக் அணிக்கு உணவு வழங்கியவர்களுக்குக் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இந்த ஒலிம்பிக் தொடர் ரசிகர்கள் இன்றி நடத்தப்படுகின்றது. வீரர்கள், அவர்களுக்கு உதவி செய்பவர்கள், அவர்கள் தங்கும் விடுதிகளின் ஊழியர்கள் என அனைவரும் பாதுகாப்பு வளையத்திற்குள் உள்ளனர். இந்த நிலையில் ஜப்பானில் பிரேசில் ஜூடோ அணிக்கு உணவு வழங்க ஒரு விடுதியை ஒலிம்பிக் நிர்வாகம் ஏற்பாடு செய்தி ருந்தது. அந்த விடுதியில் உள்ள 8 ஊழியர்களுக்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத் தப்பட்டுள்ளது. (ம)

# முதலிடத்தில் பாபர் அசாம்!

லண்டன், ஜூலை 16

இங்கிலாந்து பாகிஸ்தான் அணிகளுக்கு இடையில் நடைபெற்ற மூன்றாவது ஒருநாள் ஆட்டத்தில் 158 ஓட்டங்களைக் குவித்ததை அடுத்து துடுப்பாட்டத் தரப்படுத்தலில் மீண்டும் முதலிடம் பிடித்தார் பாபர் அசாம். பாபர் அசாம் 873 புள்ளிகளுடன் முதலிடத்திலும், கோலி 857 புள்ளிகளுடன் இரண்டாவது இடத்திலும், ரோகித் சர்மா 825 புள்ளிகளுடன் மூன்றாவது இடத்திலும் உள்ளனர். நியூசிலாந்து வீரர் ரெய்லர் நான்காவது இடத்திலும் ஆஸ்திரேலிய வீரர் பின்ஞ் 5ஆவது இடத்திலும் உள்ளனர். (ம)

## வேலை வாய்ப்பு

- நிறுவனம்: வன்னி விழிப்புலனற்றோர் சங்கம்
- பணிநிலை: கல்வி அபிவிருத்தி திட்ட உத்தியோகத்தர்
- தகைமை: பட்டதாரி, ஆங்கிலப்புலமை, கணினி அறிவு முக்கியம்
- சம்பளம் நேரில் தீர்மானிக்கப்படும்
- இடம் : இல.203 A9 வீதி, கிளிநொச்சி.
- தொடர்புகளுக்கு: Vannivissually@gmail.com 021 228 3080, 077 674 4651
- விண்ணப்ப முடிவுதிகதி: 31.07.2021

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 16.07.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.